விலை சதம் 50

பக்கங்கள் — 10

மில்க்வைற்
தொழிலகம்

வர்த்தகப் பெருமக்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். தயவுசெய்து எங்கள் தயாரிப்புக்களை உரிய மேலுறைகளோடு விற்பனை செய்து ஆதரவு நல்குங்கள்.

-தொழிலதிபர்.

★

# ஈழநாடு
## வார மலர்

*THE EELANADU VARAMALAR*

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1978-9-1
PERIODICALS DIVISION
LIBRARY

இனும்

செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில் அண்ணா தயாரிப்புக்களை வாங்கி இனும் பொருட்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி: 7412

மலர் 20 | புரட்டாதி 1 | ஷவ்வா 13 | ஞாயிற்றுக்கிழமை | (17—9—78) | இதழ் 218

# கூட்டணி எம்.பிக்கள் 21ம் திகதி பதவிப்பிரமாணம்

புதிய அரசியல் அமைப்புச்சட்டத்துக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் அனைவரும் எதிர்வரும் 21- ம் திகதி பாராளுமன்றத்தில் விசுவாசம் தெரிவித்து சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்கள்.

இதுபற்றிய தீர்மானம் நேற்று யாழப்பாணத்தில் நடைபெற்ற தமிழர்விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் எம்.பி.திரு. யோகேஸ்வரன் இல்லத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நேற்று கூட்டணி பாராளுமன்ற குழு கூடியது.

யாழ்ப்பாண மாவட்ட தொகுதிகளை சேர்ந்த எம். பிக்களும் திருமலை எம். பி. திரு. சம்பந்தன், வவுனியா எம். பி. திரு.தா. சிவசிதம்பரம் முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ் எம். செல்லத்தம்பு ஆகியோர் சமூகமளித்தனர்.

இம்மாதம் 21-ம் தேதி காலை 9 மணிக்கு கொழும்பில் சகல கூட்டணி எம்.பிக்களும் கூடி அன்றைய நிலை பற்றி ஆராய்வதெனவும் அதன்பின் புதிய அரசியலமைப்புக்கு சத்தியப்பிரமாணம் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. (சு)

## புதிய அரசமைப்புத் திட்டத்தில்
# நீதிமன்ற மொழி பிரமாணம்:
# தமிழர் கூட்டணி கண்டனம்

((யாழ்ப்பாணம்)

**தமிழ்ப் பிரதேசத்தில் தமிழ் மொழியே நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை முறியடிக்கும் முகமாக அண்மையில் ஆங்கிலத்தையும். சிங்களத்தையும் நீதிமன்றங்களில் புகுத்துவதற்கு வர்த்தமானி மூலம் பிறப்பித்த ஒழுங்கு விதிகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கிறது.**

இவ்வாறுகூறும் தீர்மானம் யாழ். கூட்டணி தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர் திரு. எம்' சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் சுமார் 2 மணிநேரம் நடைபெற்றது.

மேற்படி தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது நீதிமன்ற மொழி தொடர்பாக வர்த்தமானி மூலம் அறிவித்த ஒழுங்கு விதிகள் புதிய அரசியலமைப்பு தமிழ்மொழிக்கு தக்க இடத்தையும் பாதுகாப்பையும் கொடுக்கவில்லை யென்பதைத் தெளிவாக காட்டுகிறது.

வவுனியா, திருகோணமலை அம்பாறை நீதிமன்றங்களில் சிங்கள ஆங்கில மொழிகளையும் நீதிமன்ற மொழியாக கொண்டுவந்ததை தமிழர் விடுதலைக்கூட்டணி ஆட்சேபிக்கிறது.

இம்மாதம் 21-ம் திகதி கூட்டணி பாராளுமன்றகுழு கொழும்பில் கூடுவதென்றும் அன்றையநிலைபற்றி ஆராய்ந்து அதன் பின் பாராளுமன்றத்தில் புதிய அரசியல் அமைப்புக்கு சத்தியப்பிரமாணம் செய்வதென்றும் கூட்டணி பாராளுமன்ற குழு எடுத்துள்ள முடிவை கூட்டணி மத்திய செயற்குழு நேற்று ஏற்றுக்கொண்டது.

### தொழிற்சங்கக் கூட்டணி வேலைநிறுத்தம்

தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணி பொதுவேலைநிறுத்தத்தில் கலந்துகொள்வதற்கு ஆதரவாக மொழிக்கொள்கையால் பாதிக்கப்பட்ட ஊழியருக்கு நிவாரணம் வேண்டுமென்ற தீர்மானத்தையும் மத்திய குழு ஏற்றுக்கொண்டது. (சு-இ)

### நாவற்குழி ரயில் விபத்து

## சாரதிகள், 'கார்ட்'மார் தற்காலிக வேலை நீக்கம்
### அதிக வேகம் காரணமாம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் தடம் புரண்ட எண்ணை ரயிலில் கடமையாற்றிய என்ஜின் சாரதி, உதவி சாரதி, பிரதம கார்ட், உதவி கார்ட் ஆகிய நால்வரும் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

சம்பவம் நடைபெற்ற இடத்தில் ரயில் பாதையில் ஒரு வளைவு இருப்பதாகவும் அவ்வளைவில் 15 மைல் வேகத்திலேயே ரயில் செல்லவேண்டுமெனற அறிவித்தல் பலகை இருந்தும் ரயில் அதிக வேகத்தில் வந்ததென்றும் இதன் காரணமாகவே விபத்து ஏற்பட்டதென்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த ரயிலின் என்ஜினுக்கும் எண்ணை தாங்கிகளுக்கும் இடையே இணைக்கப்பட்டிருந்த பெட்டியின் இணைப்புமுறையும் இவ்விபத்துக்குக் காரணம் என்றும் கருதப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் தற்காலிகமாகப் போடப்பட்ட ரயில்பாதையால் இப்போது ரயில்சேவை நடைபெற்று வருகிறது.

### வேகம்குறைந்த ரயில் சேவை ரத்து

அத்துடன் காங்கேசன் துறையிலிருந்து சேவையாற்றும் சகல வேகம் குறைந்த ரயில் சேவைகளும் தற்போது நிறுத்தபபட்டுள்ளன. கொழும்புக்குச் சென்று திரும்பும் வேகம் குறைந்த ரயிலும்சாவகச்சேரியிலிருந்தே சேவைக்கு விடப்படுகிறது.

எனினும் நாளைமுதல் சகல வேகம் குறைந்த ரயில்களும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என அறிவிக்கப்படுகிறது.

கொழும்புக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் காலை, மாலை கடுகதி ரயில்களும் இரவு தபால் ரயிலும் வழமைபோல் உரிய நேரத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது (இ.

## ஆத்மஜோதிக்கு பொன்னாடை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் இன்று இரவு ஆத்மஜோதி முத்தையா, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

## ஜே. ஆரின் மருமகனும் ஆதாரமின்றி கைதானர்
### ஜனதிபதி கமிஷன் முன் சிவாபசுபதி

(கொழும்பு)

'திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பாஸ்போர்ட்டை சில விசாரணைகளுக்காக ரத்துச்செய்யவேண்டும் அல்லது இடைநிறுத்த வேண்டுமென்று சி. ஐ. டி பகுதி அதிபர் திரு. டிரல் குணதிலகா என்னிடம் கேட்டபோது திரு. ஜெயவர்த்தனவிடமே இதுபற்றித் தொடர்புகொள்ளுமாறு ஆலோசனைகளைக் கூறினேன்'

இவ்வாறு சட்டமா அதிபர் திரு. சிவாபசுபதி ஜனதிபதி ஆலோசனைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

அவர் மேலும் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் மருமகனை நிஹால் வீரதுங்காவை ஜப்பானியப் பிரஜை ஒருவரின் புகாரின் பேரில் அந்த ஜப்பானியரின் முன்னிலையில் விசாரணை செய்வதற்காக கைதுசெய்து ஒரு வார காலத்தில் விடுதலை செய்வதாக திரு. குணதிலகா கூறினர். ஆனல் நான்கு நாட்களிலேயே திரு. வீரதுங்க விடுதலைசெய்யப்பட்டார். அவர் மீது வழக்குத் தொடர ஆதாரம் எதுவும் இருக்கவில்லை,

### 7 வருடச் சாபக்கேடு

7 வருடச் சாபக்கேடு என்ற பிரசுர ஒன்றை வெளியிட்டதாக இன்றைய திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் டாக்டர் விக்கிரம வீரசூரியா மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஆனல் அவர் மீதும் வழக்குத்தொடரப்படவில்லை. வழக்குத் தொடர ஆதாரம் எதுவுமிருக்கவில்லை.

### 'தவச' நிறுவனம் சீல் வைக்கப்பட்ட காரணம்

மரவள்ளிக்கிழங்கை உட்கொண்டதினல் ஏற்பட்ட மரணம் பற்றிய செய்திக்கு வேண்டியதாக அளவு முக்கியத்தும் கொடுத்து அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்யப்பட்ட தனலேயே 'தவச' நிறுவனம் 'சீல்' வைக்கப்பட்டதாக அப்போது தகுதிவாய்ந்த அதிகாரியாக இருந்த திரு றிட்ஜ்வே திலகரத்தின தெரிவித்திருந்தார் என்றும் திரு. சிவா பசுபதி கூறினர்.

### கொழும்பு இந்துக்கல்லூரி அதிபர்மீது லஞ்சக் குற்றம்

கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் திரு. என். ஜெகநாதன் லஞ்சக் குற்றச்சாட்டின் மீது கைது செய்யப்பட்டார். தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி அவருக்கு எதுவுமே தெரியாத நிலையில் அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார் என்று அரசாங்க தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஏ. சி. டி சொய்சா கமிஷன் முன்னிலையில் தெரிவித்தார்.

முன்னாள் லஞ்ச ஆணையாளர் திரு. இயன் விக்கிரமநாயக்காவினல் மிகவும் கண்ணியமான மனிதரான திரு. ஜெகநாதன் நீதிநியாயமற்ற முறையில் இம்சைப்படுத்தப்பட்டார் என்றும் திரு. சொய்சா தெரிவித்தார். (இ)

# ஆலயத்தில் துணிகர திருட்டு

## பொலிஸ் நாய் அழைக்கப்பட்டது

(நெல்லியடி)

கரவெட்டிவெல்லனிற் பிள்ளையார் ஆலயத்தில், பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இப்பயங்கரக் கொள்ளையின் போது, பிள்ளையாரின் தங்கக் கிரீடம், பட்டுச் சால்வைகள், நாளாந்தச் செலவுக்கான 700 ரூபா ரொக்கப் பணம் ஆகியவை திருடப்பட்டுள்ளன.

இக்கொள்ளை சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிசில் கோவில் மணியகாரர் வித்துவான் க. நடராஜா புகார் செய்துள்ளார். பருத்தித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி நிகால் ஜெயசேகரா, சப்-இன்ஸ்பெக்டர் தந்தலால் ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

திருட்டுப்போன இடத்தில் ஒரு சீலைத்துண்டு கண்டெடுக்கப்பட்டது. நேற்றுமுன் பொலிஸ் நாய் கொண்டுவரப்பட்டது. ஆயினும் எந்தவித பலனும் ஏற்படவில்லை. கோயில் மணிக்கூட்டுக்கோபுரத்தடியில் சென்று வயல் வெளியை அடைந்தவுடன் நாய் நின்றுவிட்டது.

# யாழ். வளாகத்தில்

## பனம்பொருள் ஆராய்ச்சி?

### சாத்தியக்கூறுகள் பற்றி ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ். வளாகத்தில் பனம்பொருள் உற்பத்திஅபிவிருத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்வது குறித்து பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா யாழ். வளாகத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் யாழ். வளாகத்தின் விஞ்ஞானபீட பேராசிரியர்கள் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

வடபகுதி தெங்குப் பனம் பொருள் கூட்டுறவுச்சங்க பிரமுகர்களுடனும், திரு. கே. சி. நித்தியானந்தா மாநாடு ஒன்றை நடத்தினர். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டில் வடபிரதேச கூட்டுறவு உதவிஆணையாளரும், சகஅதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அரசு மீண்டும் மரவரி முறையை அமுலாக்குமாஎன வடபிரதேச தெங்குப்பனம் பொருள் உற்பத்திச்சங்கப்பிரமுகர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. உங்களுக்கு மேலும் பல வசதிகளும், உரிமைகளும் அரசினால் வழங்கப்படவுள்ளது.

பனம்பொருள் உற்பத்தி அபிவிருத்திகுறித்துஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 11 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளதாகவும் திரு. நித்தியானந்தா தெரிவித்துள்ளார். (இ)

# கிணறு வெட்ட நிதி

[வவனியா]

சென்ற ஆண்டு திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படாதிருக்கும் 459 உணவுற்பத்திக் கிணறுகளை வெட்டிக் கட்டிமுடிப்பதற்காக6,32,520 ரூபாயை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் நிதி ஒதுக்கியுள்ளார்.

இக்கிணறுகள் பூர்த்தியாக்கப்படும் பட்சத்தில் மேலும் 1000 ஏக்கர் நிலம் உணவுற்பத்திக்கு பயன்படுத்தப்படும். அடுத்த ஆண்டு உணவுற்பத்தி கிணறுகளுக்காக அரசு பணம் தருவது திடமற்றதாக இருப்பதால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு வவனியா விவசாயிகளை வவனியா எம் பி. கேட்டுள்ளார். [உ[

# யாழ்.லயன்ஸ்கழக ஐ. நா. தினம்

[யாழ்ப்பாணம்]

யாழ். லயன்ஸ் கழகம் அடுத்தமாதம் 24ம் திகதி ஐக்கிய நாடுகள் தினத்தைக் கொண்டாடுகிறது.

இதுதொடர்பாக 'அபிவிருத்தியில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்கு' என்னும் பொருள் பற்றிய விசேட பேச்சுப் போட்டி ஒன்றை லயன்ஸ் கழகம் நடத்துகிறது.

16 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடையே இப் பேச்சுப்போட்டி நடத்தப்படுகிறது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை அக்டோபர் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் கைதடி நவீல்ட் செவிடர்,குருடர் பாடசாலை அதிபர் திரு. ஜெயசிங் டேவிட்டுக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். [இ]

## அடுத்த ஆண்டுக்கான

# அரச, வங்கி, போயா விடுமுறை தினங்கள்

(கொழும்பு)

1979-ம் ஆண்டுக்கான பொது அரசாங்க, வங்கி விடுமுறைகள் பின்வருமாறு:-

ஜனவரி 12 (வெள்ளி) டுருது முழுமதி போயா தினம்.

ஜனவரி 14 (ஞாயிறு) தமிழ் தைப்பொங்கல் தினம்.

பெப்ரவரி 4 (ஞாயிறு) இலங்கையின் சுதந்திரதினம்.

பெப்ரவரி 10(சனி) முகமது நபிநாயகம் பிறந்ததினம்.

பெப்ரவரி 11 (ஞாயிறு) நவாம் முழுமதிபோயாதினம்.

பெப்ரவரி 25 (ஞாயிறு) மகா சிவராத்திரி தினம்.

மார்ச் 13 (செவ்வாய்) மெடின்முழுமதி போயாதினம்

ஏப்ரல் 12 (வியாழன்) பாக் முழுமதிபோயாதினம்.

ஏப்ரல் 13 (வெள்ளி)பெரிய வெள்ளி, சிங்கள-தமிழ் புத்தாண்டுக்கு முன்தினம்.

ஏப்ரல் 14 (சனி) சிங்கள-தமிழ் புத்தாண்டு தினம்.

மே 1 (செவ்வாய்) மே தினம்.

மே 11 (வெள்ளி) வெசாக் முழுமதி போயாதினம்.

மே 12 (சனி) வெசாக் தினத்தை அடுத்துவரும் முழுமதி போயாதினம்.

மே 22 (செவ்வாய்) தேசிய வீரர் தினம்.

ஜூன் 9 (சனி) பொசன் முழுமதி போயாதினம்.

ஜூன் 30 (சனி) விசேட வங்கி விடுமுறை தினம்.

ஜூலை 9 (திங்கள்) எசல முழுமதி போயா தினம்.

ஆகஸ்ட் 7 (செவ்வாய்) நிகினி முழுமதிபோயாதினம்.

ஆகஸ்ட் 25 (சனி) ரம்லான் தினம்.

செப்டம்பர் 5 (புதன்) பினரா முழுமதிபோயாதினம்.

அக்டோபர் 5 (வெள்ளி) வப் முழுமதி போயாதினம்'

அக்டோபர் 20 (சனி) தீபாவளி தினம்.

நவம்பர் 1 (வியாழன்) ஹஜ்ஜுப்பெருநாள்.

நவம்பர் 3 (சனி) இல் முழுமதி போயாதினம்.

டிசம்பர் 3 (திங்கள்) அன்துவப் முழுமதி போயாதினம்.

டிசம்பர் 25 (செவ்வாய்) நத்தார் தினம்.

டிசம்பர் 31 (திங்கள்) விசேட வங்கி விடுமுறைத் தினம்.


டுபாயில், ஈரான், பாகிரீன், சவூதிஅரேபியா

ஆகிய நாடுகளுக்கு பாஸ்போர்ட் கைவசம் உள்ளவர்கள் உடன்

தேவை

தேவையான உத்தியோகத்தர்கள்:

மனேஜர்கள், கணக்காளர்கள், தாதிகள் விற்பனையாளர், ஸ்ரோர்கீப்பர், சிக்குறிற்றிமார், சாரதிகள், காரியாலயப் பையன்கள். தையல்காரர்கள், இயந்திரம் திருத்துவோர், பிளம்பர்கள், சமையல்காரர்கள், தோட்டக்காரர்கள், தச்சர், மேசன், டெலிபோன் தட்டெழுத்தாளர்கள், எலக்றிக்கல்ஸ், மோட்டார் மெக்கனிக்ஸ், பாதுகாப்பு அதிகாரிகள் [இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்] ஆகியோர் தேவை. நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ விண்ணப்பிக்குக.

ஜெயா டூர் சேவிஸ்

66, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

கொழும்பு கிளை:
ஜெயா டூர் சேவிஸ்,
முதலாம் மாடி,
43/1, காலிமுக திராஸ்,
கொழும்பு—3.

[0343]

COLOMBO-BRANCH:
JEYA TOUR SERVICE,
FIRST FLOOR,
43/1, GALLEFACE TERRACE,
COLOMBO—3.


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

றேடியோகிறேம் விற்பனைக்கு. நோர்த்மெண்டி மெயின் செட். நல்ல நிலையில் உள்ளது. விலை விபரங்களை நேரில் அறியலாம். பார்வையிடும் இடம்: யாழ்ப்பாணம் றேடியோ அன் எலெக்றிக்கல்ஸ், 91/5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0340

வீடு கட்டக்கூடிய 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. 3-ம் கட்டை, நார்வலர் வளவு, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 0347

8 ஸ்ரீ 12—1300cc வொக்ஸ் வகன் கார் விற்பனைக்குண்டு. காலை 8 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் பார்வையிடலாம். தொடர்பு: R. ஸ்கந்தரத்தினம், 233, பொற்பதி ரோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 0337

ஊறல் பாக்கு போடவும், தண்ணீர் பந்தல் பாவனைக்கும், கள்ளுத் தவறணைக்கும் உபயோகிக்கக்கூடிய சாடிகள் விற்பனைக்கு உண்டு. ச. ஜெகதீஸ்வரன், பண்டதெருப்பு வீதி, சித்தன்கேணி. 0336

வீணை ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க; 25, டெய்சி வில்லா அவென்யு, பம்பலப்பிட்டி. 0331

பளை-கிளாலி புதுறோட்டில் 35¾ பரப்பு தென்னை-பனங் காணி விற்பனைக்குண்டு. கடித மூலம் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல. 0329, C/o. ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம். 0329

தெல்லிப்பழையில் தனிக் கிணற்றுடன் 16 பரப்புத் தோட்டக்காணி உடனடி விற்பனைக்குண்டு. திருமதி ந. சிவரத்தினம், 'அம்பிகை வாசா', பார் மணியம் ஒழுங்கை, தெல்லிப்பழை. 0321

யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத் தெருவில் 9/2 இலக்கமுள்ள 4 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: ஜே. எஸ். ஜேகப் 421/30 டார்லி ரோட் (Darley Road) கொழும்பு-10. 0316

## விற்பனைக்கு

மின்சார இயந்திரம் (Generator) 25 கில்லோ வாட், 440 வால்ட்ஸ், 3 பேஸ், தன்னியக்கம் 'றேடியேட்டர்' குளிரூட்டி, ரம்மியமான நிலைமை. ரூபா 50,000-க்கு மேல் மதிப்பிடவும். நோர்த் மாரின் லிமிட் 143, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். 0326

## தேவை

பாதுகாவலர்கள் தேவை. நகரசபை எல்லைக்குள்ளும் மற்றும் மூன்று மைல் சுற்றுடலில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். வயது எல்லை 19 மேல். பொதுமுகாமையாளர், கொம்மேஷல் பாதுகாப்பு சேவை, No. 35, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 0344

இன்று

# வன்னியசிங்கம் நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

அமரர் வன்னியசிங்கம் நினைவு தினம் இன்று ஞாயிறு மாலை இருபாலைச்சந்திக்கருகில் கோப்பாய் எம்.பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர் திரு.எம் சிவசிதம்பரம் உட்படகூட்டணி எம்.பி.க்கள் மற்றும பிரமுகர்களும் உரையாற்றுவார்கள்.

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் பண்டிதர் மு. கந்தையாவின் 'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்' என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெறுகின்றது.

நூலைவெளியிடுபவர் திரு. மு. வைரமுத்து. முதற்பிரதியை வாங்குபவர் பேராசிரியர் அ. சின்னத்தம்பி.

முதலியார் வை. மகேசன், பண்டிதர் ச சுப்பிரமணியம், வித்துவான் சி. ஆறுமுகம், க. சொக்கலிங்கம், சு. இராஜநாயகம், ஆ கணபதிப்பிள்ளை, செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் நூல் மதிப்புரை வழங்குவார்கள். (ஊ)

# கரணவாயில் பொன். கந்தையா நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை 6 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள 'பொன் இல்லம் அரங்கில்' மேதைபொன் கந்தையா நினைவுதினம் கொண்டாடப் படுகின்றது.

சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் உடுப்பிட்டி எம்.பி. திரு. த.இராசலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், கம்யூனிஸ்ட்கட்சிப் பிரதிப் பொதுச்செயலாளர் திரு கே பி சில்வா, கலாநிதி கா.சிவத்தம்பி, கம்யூனிஸ்ட்கட்சி யாழ் மாவட்டச் செயலாளர் திரு அ வைத்திலிங்கம்,யாழ். கம்யூனிஸ்ட்கட்சி அமைப்பாளர் பொன். குமாரசாமி ஆகியோர் உட்பட மற்றும்பலரும் உரையாற்றுவர்.

'சிலைகள்', 'நவரச கலசம்' 'காத்திருந்தவன் மனைவி', 'அலீமா' என்னும் நாடகங்களும் கலைநிகழ்ச்சிகளாக இடம்பெறும். [கூ]


இப்பொழுது வாங்கலாம்

பிரவுண்சனின் இன்னுமோர் தரமான தயாரிப்பு

பிரவுண்சன் அராறூட்மா

Brownson

இறக்குமதிசெய்து விநியோகிப்பவர்கள்:
பிரவுண்சன் இண்டஸ்ரீஸ்
80 1/4 பிறைஸ் பிளேஸ்
கொழும்பு 12.
தொலைபேசி; 27197




Ariyaratne Veyangoda

பிரவுண்சன் அராறூட்
அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.



# திருமணங்கள் நிச்சயிக்கப்படுவது எங்கே?

## கணபதி கணேசன்

"மாலதி" என்ன இனிமையான பெயர். அவள் அழகு வேறு யாருக்கு வரும். ஆனால் அந்த இனிமைக்கும் அழகுக்குமுள்ளே என்ன மறைந்து கிடக்கின்றது என்பதை யார் அறிவார்! தெளிந்த நீரோட்டத்தின் அடியே பயங்கர சுழிகளாகச் சுழன்றுடும் பயங்கரக் கனல் ஓட்டங்களை — மனிதனின் உயிர்ப்புச்சக்தியை அடியோடு மறைத்து வெளிப்பகட்டும் இன்சொல்லுமாக ஏய்த்துக்காட்டும் உலகமல்லவா இது! இந்த உலகத்தைச் சேர்ந்தவள்தானே மாலதியும்.

அவளது சிரிப்பில்—அழகில் என்னை இழந்தேன் அன்று. இன்று என்னையே இழந்து நிற்கின்றேன். இத்தனைக்கும் அவள் என்ன செய்துவிட்டாள்? அவளது மனத்தில் மணம் வீசிக் கொண்டிருந்த என்னை எடுத்தெறிந்துவிட்டாள். அவ்வளவுதான்! இதற்கு நான் செய்த குற்றம்தான் என்ன? அதுதான் எனக்கும் புரியவில்லை.

மாலதியை மறக்க முயன்றேன். முடியவில்லை. வீட்டை விட்டு புறப்பட்டால் அவளது வீட்டைக் கடந்துதானே செல்லவேண்டும். எப்படி அவளது நினைவுகளை மறந்துவிட்டு வீட்டைத்தாண்டிச்செல்வது? அவளுக்கு இது சாத்தியமாக இருக்கலாம். ஆனால்எனக்கு?

அவளை மறப்பதற்காகக் குடிக்க ஆரம்பித்தேன். காலையில் எழுந்ததும் இரவில் கொண்டுவந்ததில் மிச்சமிருக்கும் மதுவை வாயில் ஊற்றிக்கொண்டு வெளியே செல்லும் பொழுது எனக்கேன் அவள் நினைவு வரப்போகிறது. ஒரே போதை! போதையில்தான் இன்பத்தைக் கண்டேன். ஊரெல்லாம் சுற்றி அலைந்துவிட்டு மாலையில் வரும்பொழுதும் குடித்துவிட்டுத்தான்வருவேன். போதை தெளிநதால்- மயக்கம் அகன்றால் மாலதி நினைவுதான். என்னால் மாலதியை மறக்கவே முடியவில்லை. ஆனால் அவளால் என்னை எப்படி மறக்கமுடிந்தது? எனக்கே இது இன்னும் கேள்விக்குறிதான் என் நிலை கண்டு என் அம்மா கண்ணீர் வடிக்காத நாளில்லை. தங்கை கண் கலங்காத பொழுதில்லை. தம்பி உள்ளம் குமுறாத நேரமில்லை.

உலகம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. நாம் எதிர்பார்க்கவில்லை என்பதினாலோ, அல்லது நம்பமுடியவில்லை என்பதனாலோ உலகில் எதுவும் நடந்துவிடாமல் இருப்பதில்லையே!

காலத்தின் கணக்கு எப்போதும் பிழைப்பதில்லை. ஆம். விதியின் கணக்கு ஒருபோதும் பிழைப்பதில்லைதான். என்ன செல்வது என் விதிதான் என்று எண்ணி மனச்சாந்தி அடைய முடிகின்றதா? என்ன! அவளை மறந்து வாழ முடியவில்லை. சாகவும் முடியவில்லை. தற்கொலைக்கும் என் மனம் இடம்தரவில்லை. காரணம் கோழைத்தனமில்லை.

கள்ளமில்லா வெள்ளை உள்ளம் நிரம்பத் ததும்பத்ததும்ப பாசம் வைத்துக் கொண்டிருக்கும் தாய், கடமையும் அன்பும் கலந்து உருவாகிய தம்பி, பாசத்தின் பக்கச்சிறகுகளான சகோதரி. இந்த அன்புக் குடும்பத்துக்குள் புகுந்து தன்னையும் தன் அன்பையும் அர்ப்பணித்து வாழ்வதற்கு வெளியே ஒரு காலத்தில் துடித்துக்கொண்டிருந்த மாலதி.

இத்தகைய அன்புள்ளங்களை மறந்து என்னால் எப்படி சாக முடியும்? இவர்கள் எல்லோருடைய நினைவுகளைவிட மாலதியின் நினைவுதான் என்னை எவ்வளவு தூரம் மாற்றிவிட்டது.

மாலதி வீட்டில் இரண்டே இரண்டு பேர்தான். மாலதியின் தந்தை ஒரு முன்னாள் பொலிஸ் அதிகாரி. அவரது ஓய்வு ஊதியப் பணத்திலும் மாலதி சிறுவர் பாடசாலையில் படிப்பித்துக்கிடைக்கும் பணத்திலும்தான் அவர்கள் இருவரின் வாழ்க்கைவண்டி ஓடியது. அவர்களுக்கு அதிகம் செலவில்லை. கொடுத்துவைத்தவர்கள்தான். வசதிகள் எல்லாம் படைத்தவர்கள்கூட இத்தனை அழகாகவா குடும்பம் நடத்துகின்றனர்.

ஆசாரத்தை ஒட்டித்தான் குணம் அமைகிறது என்பார்கள். பரம்பரை பரம்பரையாக வருகின்ற குணம்தான் பண்பாடாக அமைகிறது. இந்தப் பண்பாடுதான் நல்லதையே தேர்ந்து எடுக்கின்ற நாகரீகமாக உருவாகின்றது. செம்மையாக சிக்கனமாக குடும்பம் நடத்துவதும் ஒரு கலைதான். இருப்பது கீரைதான் என்றாலும் சோம்பலைப் பாராமல் அதைத் தளிர்தளிராகஆய்ந்து நார் நரம்புகளை ஒதுக்கி வாய்க்கு ருசியாக விருந்துக்கு சுவையாக ஆக்கிப்படைப்பது ஒரு தனி அழகு இல்லையா? மாலதி இந்த வகையில் கெட்டிக்காரி. பணம், அழகு எல்லாமிருந்தும் வருவாய்க்குத்தகுந்தால்போல் வாய்க்கு வகையாகவிருந்துக்கு அன்பாக படைக்கின்ற குடும்பம் எல்லோருக்குமாக மாய்த்து விடுகின்றது? இந்த வகையில் மாலதியின் தந்தை கொடுத்து வைத்தவர்தான்.

நானும் ஏன் கொடுத்து வைத்தவனாக இருக்கக்கூடாது? மாலதியை அடைந்துவிட்டால் அவளுடைய அழகுக்கும் குணத்துக்கும் வேறு ஒரு பெண் நிகராகுமா? என்ன இருந்தாலும் மாலதி, மாலதிதான். இதனால்தான் நானும் மாலதியை மனமாரக் காதலித்தேன்.

நான் குடியிருக்கும் வீட்டுக்கு நான்கு வீட்டுக்கப்பாற்தான் மாலதியின் வீடு உள்ளது. எங்கள் வீட்டில் பின்னறையன்னலில் நின்று பார்த்தால் மாலதியின் வீடு தெரியும். அலுவலகத்துக்குப் பக்கத்தில்தான் மாலதி படிப்பிக்கும் சிறுவர் பாடசாலை அமைந்துள்ளது. தினமும் நான் வேலைக்குப் போகும்பொழுது என்னுடன்தான் அவள் வருவாள். திரும்பும்போதும் அப்படித்தான் தினமும் இச்சந்திப்புத் தொடர்ந்து மாலதியின் அப்பாவுக்கும் எனது குடும்பத்தாருக்கும் இவ்விபரம் தெரிந்தது. ஆயினும் அவர்கள் பேசாமல் இருந்துவிட்டார்கள். காரணம் என்மீதும் மாலதியின்மீதும் கொண்ட அன்பும் நம்பிக்கையும்தான்.

மாலதி- சங்கர் என இருந்த நாம் இருவரும் ஒருவராக ஓர் உயிரும் ஓர் உடலுமாக மாறினோம். நாம் இன்பமாக வாழ்வதைப் பார்க்கக் கடவுளுக்கே பொறுக்க முடியவில்லை போலும்.

விதி பொலிஸ்காரன் கோபால் உருவில் எனது வாழ்வில் புகுந்தது. மாலதியின் தந்தையின் நண்பர் மகன் அவன். மாலதியை கோபாலுக்கு கட்டிவைக்கவேண்டுமென்ற ஆசை. மாலதியின் தந்தைக்கு மனதில் உள்ளூர இருந்தது. மாலதியின் தகப்பனும் கோபாலுக்கே அவளைத் திருமணம் செய்ய இசைந்துவிட்டார். மாலதி விரும்பினால் கட்டிக்கொள் என்று கோபாலிடம் கூறிவிட்டார். நானும் மாலதியும் பழகுவதைக் கண்டும்கூட அவர் அப்படிச் சொல்லியிருக்கின்றார்! அவரை நான் எந்த ரகத்தில் சேர்த்துக்கொள்வது?

கோபாலும் அடிக்கடி மாலதி வீட்டுக்கு வரத்தொடங்கினான். மாலதியின் மனதை மாற்ற எவ்வளவோ பாடுபட்டான். பெண்கள் இயல்பாகவே பலவீனமானவர்கள். அதிலும் என் மாலதி .........!

பெண்களின் இயல்பான பலவீனங்களே மாலதியையும் பாதித்தது. நகை. நல்ல துணி, பொருள், பண்டம் என்றாலே எத்தகைய பெண்ணும் மனம் இழந்துபோகிறாள். பெண்களை மெல்லியலாள் என்று குறிப்பதே இத்தகைய பலவீனங்களையிட்டுத்தான், என நான் எண்ணுவதுமுண்டு.

இத்தகைய ஆசைகளே பெணகளை தம் நிலை மறந்து இழிந்த செயல்களில் இறங்கத் தூண்டுகின்றன. இப்பலவீனத்தைப் பயன்படுத்தித்தான் கோபாலும் மாலதியைத் தன் வசப்படுத்தினான். அவனும் அவள் வலையில் வீழ்ந்தான். என்னை மறந்தாள். நான் என்னை இழந்தேன்.

"சங்கர் என்னை நீங்கள் மறந்துவிடுங்கள். கோபாலைத்தான் திருமணம் செய்யப் போகிறேன்" என்றாள் ஒரு நாள் என்னிடம்.

இதன் பிறகு மாலதி என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. நான் என் நிலை இழந்தேன்; நடைப்பிணமானேன். தொடர்ந்தும் அமைதியாகத் தொழில் புரிய முடியவில்லை. வேலையை விட்டு விலகினேன் அல்ல அல்ல!! விலக்கப்பட்டேன். ஊழியர் சேமலாபநிதியில் சேர்ந்திருந்த பணத்தை எடுத்து குடிக்க ஆரம்பித்தேன். மதுவினால் கவலைப்பட்டல்ல. என்னை மதியிழக்கச் செய்த மாலதியின் நினைவை மறப்பதற்கு! உணவில்லை, உறக்கமில்லை சதாகாலமும்குடித்துக்கொண்டே இருந்தேன். கையிலிருந்த பணமும் கரைந்து போயிற்று. எனது குடும்பம் இந்நிலைகண்டு எனக்காக இரங்கி அழுதது. நான் இல்லாத குடும்பம் மாலுமியில்லாத மரக்கலம்போல் தத்தளிக்கலாயிற்று. சில காலம் செல்ல தம்பி விழித்துக்கொண்டான். என்னை ஏசினான், தூற்றினான், இறுதியில் அவனும் என்னை உணர்ந்துகொண்டான். அவனே சில சமயங்களில் பணம்கொடுப்பான் குடிப்பதற்காகத்தான். எல்லோருமாகச் சேர்ந்தே என்னைக்குடிகாரன் ஆக்கிவிட்டார்கள் இப்பொழுது கோபாலை மணந்து மாலதி சுகமாக வாழ்கின்றாளாம். இதைக் கேட்ட என்னுள்ளம் வேதனையால் வெடித்துவிடும் போல் இருக்கின்றது.

கோபாலுக்காகப் பரிதாபப்பட்டது. எனவே என்னை ஏமாற்றிய மாலதி கோபாலையும் அற்ப சொற்ப இன்பத்துக்காக ஏமாற்றமாட்டாள் என்று என்ன நிச்சயம்!

தம்பி கொழும்பில் ஏதோ வேலை கிடைத்துப்போய்விட்டான். தங்கையும் திருமணத்திற்கு காத்திருக்கின்றாள். அவளுக்கு வயது ஏறிக்கொண்டே போகிறது. 'குடிகாரக் குடும்பத்தில் யார்தான் பெண்ணெடுக்கப் பேசகிறார்கள்.

குடிக்கப் பணமில்லாததால் வீட்டிலுள்ள பொருட்களை எல்லாம் எடுத்து விற்க ஆரம்பித்தேன். அம்மா கதறினாள். தங்கை கண்ணீர் வடித்தாள். கடைசியாக ரேடியோவையும் கொண்டுபோய் விற்றுவிட்டேன். தம்பிக்கு தெரியாமல். தம்பி கொழும்பிலிருந்து வந்ததும் என்னைக் கண்டபடி ஏசினான். வீட்டைவிட்டே துரத்திவிடுவதாகப் பயமுறுத்தினான். அவனுக்குக்குடும்பப்பொறுப்பு வந்துவிட்டதல்லவா? இறுதியில் விக்கி விக்கி அழுதான் அவன்.

எல்லோரும் என்னைக்கண்டு அழுகிறார்கள்! ஏன்? நான் செய்த பாவம்என்ன? செய்யக்கூடாத ஒன்றை செய்துவிட்டேனா? இத்தனைக்கும்காரணம் யார்? மாலதிதானே. மாலதி என்னை மறந்திராவிட்டால் இன்றுநான் இந்த நிலையிலா இருந்திருப்பேன். யுகம்யுகமாக இன்பத்தில் மிதந்திருப்பேனே!

ஆண்கள் கொடுமைக்காரார்கள். பெண்களை ஏமாற்றிப் பிழைப்பவர்கள், கல்நெஞ்சக்காரர்கள் என்றெல்லாம் ஆண்களை வருணித்துவிட்டு பெண்களையெல்லாம் தெய்வங்கள் என்றும் அழகின் தூதர்கள் என்றும், காவிய நாயகிகள் என்றும், பண்பின் சிகரங்கள் என்றும் வர்ணித்துள்ளார்களே அவர்களுக்குத் தெரியுமா பெண்களின் உண்மைச் சொரூபம்?

பெண்கள்தான் உண்மையில் கொடுமைக்காரர்கள். வாழ்க்கையின் துன்பத்துக்குக் காரணமே பெண்கள்தான் என்று எத்தனை பேருக்குத் தெரியும்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பார்கள். என்னைக் கேட்டால்- திருமணங்கள் நரகத்தில் கூட நிச்சயிக்கப்படுவதில்லை. அவை பெண்களின் கல்நெஞ்சங்களில்தான் நிச்சயிக்கப்படுகின்றன என்பேன். என்றாவது ஒருநாள் நான் பிணமாக மாலதியின் வீட்டின் முன்னால் ஊர்வலமாகப் போவேன். அதுவரை நடைப்பிணமாகத் திரியவேண்டியதுதான். ஏனெனில்காதலெனும் மகாபாவத்தைச் செய்துவிட்டேன் அல்லவா?

(யாவும் கற்பனை)



### பேப்பர் 'கிளிப்'புகளின் உபயோகம்

காரியாலயங்களில் பாவனைக்கு வைக்கப்பட்டிருக்கும் 'பேப்பர் கிளிப்'புகளில் 20 வீதமானவை மட்டுமே தாள்களைக் 'கிளிப்' செய்யப் பாவிக்கப்படுகிறது என்று அண்மையில் நடந்த கணக்கெடுப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காரியாலயங்களில் உள்ள 'கிளிப்'புகளில் 17 வீதம் அவ்வப்போது கிழிந்த உடைகளை தற்காலிகமாகப் பொருத்துவதற்கும், 6 வீதம் பல்லுக் குத்துவதற்கும், 7 வீதம் நகங்களைத் துப்பரவுபடுத்துவதற்கும், 3 வீதம்பேர் தமது 'பைப்'களை துப்புரவு செய்வதற்கும் பாவிக்கின்றனராம்.

14 வீதமான கிளிப்புகள் தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கும் வேளையில் வளைத்தும், முறித்தும் வீணே எறியப்படுகின்றன என்றும் மேற்படி ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

### மலேசியாவில் பாராட்டு

ஈழத்தின் பண்ணிசை வாணர்கள் வரிசையில் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் இளங்கலைஞர்களுள் ஒருவரான, தாவடியூர் திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தன் மலேசியா-கோலாலம்பூரிலுள்ள சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கத்தின் அழைப்பின் பேரில் மலேசியாவுக்குச் சென்று சுமார் இரண்டு மாதங்கள் அங்கு தங்கிப் பண்ணிசைக் கச்சேரிகள் செய்துவிட்டு நாடு திரும்பியிருக்கிறா. ஈழம் திரும்பும் போது, அங்குள்ள மக்களால் கோலாலம்பூர் கலா மண்டபத்தில் கோலாகலமான பாராட்டு ஒன்று அளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி கா. கனக



சபையின் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு வைபவத்தில் திரு. திருஞானசம்பந்தனுக்கு மலர்மாலை சூட்டி, அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

வைத்திய கலாநிதி கனகசபை தமது தலைமையுரையில், 'சைவசமய நாயன்மார்களில் முதல்வரான, ஞானசம்பந்தப் பெருமானின் திருநாமத்தைக் கொண்டவரான பண்ணிசைப்புலவர் திருஞானசம்பந்தன் இங்கு, எமது அழைப்பின் பேரில் வந்து அரிய பெரும்பணி புரிந்து, யாழ்ப்பாணத்தாராகிய எமக்கெல்லாம் பெருமை தேடித்தந்தமை மிகவும் பாராட்டத்தக்கதொன்றாகும்' என்றார்.

இவரை அனுப்பியுதவிய ஈழத்தின் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்கும் அவர் நன்றிதெரிவித்துக்கொண்டார்.

உப-தலைவர் திரு. நா. அழகானந்தம் ஏ. என். எம்., செயலாளர் திரு. தாமோதரம்பிள்ளை, உப-செயலாளர் திரு. சீ. எஸ் மூர்த்தி, பொருளாளர் திரு. சிவப்பிரகாசம் மற்றும் நிர்வாகசபையினர் உட்படச் சைவப் பெரியார்கள் திரு. ஆறுமுகம், திரு. நாகலிங்கம் ஆகியோர் இப்பாராட்டுவிழாவில் கலந்துகொண்டனர்.

மலேசிய திவ்யஜீவன சங்கத்தலைவர் சுவாமி பிரணவானந்தசரஸ்வதியவர்களும் நல்லாசி வழங்கி ஞானசம்பந்தனைப் பாராட்டியுள்ளனர்.

# பனஞ்சீனியை பெருமளவில் தயாரிப்பதற்கான வழிவகைகள்

ச. வீ. துருவசங்கரி
எம். எஸ். ஸி. விவசாயம் (-மாஸ்கோ)

பனையாராய்ச்சி - 4

சீனி உலகமக்களிடையே ஓர் முக்கிய உபஉணவுப் பொருளாக அமைந்துவிட்டது. முதல்முதலில் சீனியை சீனாவில் கரும்பில் இருந்து தயாரித்தார்கள், 150 — 160 வருடங்களுக்கு முன்னர் சீனியின் உற்பத்தி உலக மக்களுக்குப் போதாமல் இருந்ததால் உற்பத்தியைப் பெருக்க வழிவகைகளைத் தேடினார்கள். இதன்பயனால்தான் இன்று கரும்பில் இருந்து மட்டுமல்லாமல் பீற் என்னும் ஒருவகை வேர்க் கிழங்கிலிருந்தும் சீனியைப் பெறக்கூடியதாக இருக்கிறது. முதன்முதலில் சீனி பீற்றில் இருந்து பெறப்படும்போது பீற் 8-10% சீனியை மட்டும் தன்னுள் கொண்டிருந்தது. தற்போது பீற் கிழங்குகளில் விஞ்ஞானிகள் கலப்புப் பிறப்பாக்கல் மூலமாகவும் தேர்வுமுறையாலும் சீனியின் செறிவை 18—22%வரை கூட்டியுள்ளார்கள். ருஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகள் பீற்றில் இருந்து மட்டுமே சீனியைப் பெறுகின்றன.

## பெருமைப்படும் விஷயமல்ல

இலங்கையில் சீனி கரும்பில் இருந்து பெறப்படுகின்றது. எமது தேவையில் 1/3 பங்கையே நாம் இலங்கையில் உற்பத்தியாக்குகிறோம். மிகுதி 2/3 பங்கையும் நாம் பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றோம். 1975-ம் ஆண்டு நாங்கள் ரூ.24,7600000க்கு 54695 தொன் சீனியை இறக்குமதி செய்துள்ளோம். இது பெருமைப்படக்கூடிய விசயம் அல்ல. நாங்கள் அரசியல் ரீதியாக சுதந்திரம் பெற்றுவிட்டால் மட்டும் போதுமா? பொருளாதார ரீதியில் என்றுதான் நாங்கள் சுதந்திரம் அடையப் போகிறோம்? எமது நாட்டு மக்களின் சுயதேவைகளைப் நாம் ஓரளவாவது பூர்த்தி செய்ய முன்வர வேண்டும் அல்லவா! இதை எமது சமுதாயம் உணர வேண்டும், அதற்காகச் செயற்படவும் வேண்டும்.

இப்படியான இக்கட்டான நிலையில் இருந்து விடுபடுவதற்கு நாங்கள் பனையில்இருந்து சீனியைத் தயாரிக்கலாம் அல்லவா? அருமையான யோசனைதான். ஆனால் இலாபகரமான முறையில் சீனியைத் தயாரித்து வெற்றியீட்டியவர்கள் யார்? கடந்த 50—60 வருடங்களாக பனையில் இருந்து சீனியைத் தயாரிக்க பலர் முயன்றும் இலாபகரமான முறையில் அமையாததால் இம்முயற்சியையே கைவிட்டுவிட்டார்கள். இருப்பினும் சென்ற அரசாங்கத்தின் ஆட்சியில் சீனியின் விலை அதிகளவு உயர்ந்ததால் பனையில் இருந்து சீனி பெறும் முயற்சியை மீண்டும் தொடங்கி இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் சீனியின் விலை இறங்கியதால் பழைய குருடி கதவைத் திறவடி என்பதுபோல் பனையில் இருந்து சீனி தயாரிக்கும் முயற்சியைக் கைவிட்டுவிட்டார்கள், இலங்கைவாழ் மக்கள் அதுவும் வடபகுதி தமிழ்மக்களுக்குக் கவலைக்குரிய விடயம்தான். இருப்பினும் வேறு வழியிருக்கவில்லையே.

இலங்கையில் இன்று 1 ரூத்தல் பனஞ்சீனி தயாரிப்பதற்கு 3 ரூ, 25 ச. — 3 ரூ. 50ச. வரை செலவாகின்றது. இதனால்தான் இன்று பனஞ்சீனி தயாரிப்பதைக் கைவிட்டுவிட்டார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இந்த இக்கட்டான நிலை இல்லை. ஏன் எனில் (1) மதுவிலக்குச்சட்டம் இருப்பதினால் சீவல் தொழிலாளர்கள் பதநீரையே சீவுகின்றனர். (2) குறைந்த சம்பளம். இக்காரணங்களகல் இந்தியாவில் பனஞ்சீனி தயாரித்தல் தொடர்ந்து இலாபகரமாக நடைபெறுகின்றது.

## சில யோசனைகள்

இலங்கையில் பனஞ்சீனி தயாரிக்கும் தொழிலை வளர்ப்பதற்கு பின்வரும் வழிகளைப் பயன்படுத்தலாம்.

(1) பனஞ்சீனி உற்பத்தியில் ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கம் தன் பொறுப்பில் ஏற்றுக் கொள்ளலாம். அல்லது நலன்புரிச் சங்கங்கள் இதைப் பொறுப்பேற்றுக் கொள்ளலாம்.

(2) மதுவிலக்குச் சட்டங்களை உண்டாக்கி கள்ளுச் சீவுவதைத் தடைசெய்து பதநீர் சீவுவதை ஊக்குவித்து பனஞ்சீனி உற்பத்தியைப் பெருக்கலாம்.

(3) பீற் என்னும் வேர்க் கிழங்குகளில் உள்ள சீனிச் செறிவை கலப்பு பிறப்பாக்கலாலும் தெரிவு முறையாலும் கூட்டியதுபோல் பனையின் பதநீரின் சீனிச் செறிவைக் கூட்டி உற்பத்தியைப் பெருக்க வழிவகுக்கலாம்,

(4) குறைந்த செலவில் பனஞ்சீனி தயாரிக்க வழிவகைகளைக் கண்டறியலாம்.

மேற்கூறிய வழிவகைகளில் முதல் இரு வழிவகைகளையும் அரசாங்கம் எப்போதோ அமுல்படுத்தி பனஞ்சீனி தயாரிக்கும் தொழிலை வளர்த்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்ய அரசாங்கம் முன்வரவில்லை. மூன்றாவது வழியைப் பின்பற்ற நீண்டகாலம் எடுக்கும். ஏன் எனில் பனை ஓர் நீண்டகாலப் பயிராகும். எனவே நான்காவது வழியை அதாவது குறைந்த செலவில் பனஞ்சீனி தயாரிக்கும் வழிவகையை நாம் ஆராய்வோம்.

## இப்போதைய முறை

இலங்கையில் பனஞ்சீனியை இலாபகரமான முறையில் பெருமளவில் தயாரிக்க வழிவகை காணுமுன் தற்போது எப்படி சீனி தயாரிக்கின்றார்கள். அதில் எப்படியான தொழிற்பிரிவுகள் உண்டு. எப்படியான செலவுகள் ஏற்படுகின்றன என்பனவற்றை முதலில் ஆராய வேண்டுமல்லவா?

பனஞ்சீனி தயாரித்தல் இரு தொழிற் பிரிவுகளைக் கொண்டுள்ளது. (1) சீனி உற்பத்தி சாலையின் வெளிப்புற அலுவல்கள். (2) சீனி உற்பத்திச் சாலையின் உட்புற அலுவல்கள்.

சீனி உற்பத்திச்சாலையின் உட்புற அலுவல்களை பல கட்டங்களாகப் பிரிக்கலாம். அவையாவன.

(அ) பனைகளைத் தெரிதல்.
(ஆ) பனைகளைக் குத்தகைக் கெடுத்தல் (இ) பனைகளில் ஏறி பாளைகளை வரிந்து கட்டி, பின் அடித்துக் கசக்கி பாளையின் உள்ளமைப்பை (கலங்களை) சிதைத்து பாளையின் நுனியைச் சீவி பதநீர் வடிய வழிவகுத்தல் (ஈ) வடியும் பதநீரைச் சேகரிப்பதற்கு பாத்திரங்களைத் தயார் செய்தலும் வடியும் பதநீரைக்கெடாமல் வைத்திருக்கப் பாவிக்கும் சுண்ணும்பைச் சேகரித்தலும் (உ) வடிந்த பதநீரை நாள் தோறும் பனைகளில் ஏறிச் சேகரித்தலும் (ஊ) சேகரித்த பதநீரை நேரத்துக்கு நேரம் சீனி உற்பத்திச்சாலைக்கு விநியோகித்தல். (ஏ) எரிபொருள் (விறகு) சேகரித்தல்

சீனி உற்பத்திச் சாலையின் உற்புற அலுவல்களும் பல கட்டங்களாகப் பிரிக்கலாம். அவையாவன;

(அ) பதநீர் கெடாமல் வைத்திருப்பதற்காக கலக்கப்பட்ட சுண்ணும்பை பிரித்தலும் வடிகட்டலும்,
(ஆ) பதநீரைக் காய்ச்சிப் பாணியாக்குதல்.
(இ) பாணியில் சீனிப்படிவங்களை விளையச் செய்தல்.
(ஈ) பாணியிலிருந்து சீனிப் படிவங்களைப் பிரித்தல்.
(உ) சீனிப்படிவங்களை உலர்த்துதல்,
(ஊ) சீனியை விநியோகத்துக்கு தயார் செய்தல்.

சீனி உற்பத்திச்சாலையின் உற்புற அலுவல்களில் உள்ள கட்டங்கள் தவிர்க்கமுடியாத கட்டங்களாகும். மேலும் இதற்கு விரயமாகும் பணச்செலவும் தவிர்க்கமுடியாததாகும். இருப்பினும் சிறந்த கண்காணிப்பால் செலவை ஓர் அளவு குறைக்கலாம். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பின்பற்றுவது போல் முழுமையான பொறிமுறை மயமாக்கல் இத்தொழிற்பிரிவில் உண்டாகும் செலவைக்குறைக்க வழிவகுக்கலாம். ஆனால் மிக அதிகளவு முதல் வீணாக முடங்கிவிடும். அது மட்டுமல்லாமல் இன்றைய நிலையில் இது இலங்கையில் பூர்த்தியாக்கக்கூடிய விடயமுமல்ல.

## குத்தகை முறை

சீனி உற்பத்திச் சாலையின் வெளிப்புற அலுவல்களில் உள்ள கட்டங்களில ஒன்றாகிய பனைகளை குத்தகைக்கு எடுத்தல் ஓர் கஷ்டமான செயலாகும். ஏனெனில் பனைகள் பெரும்பாலும் சீவல்தொழிலாளர்களுக்கு சொந்தமானவை அல்ல. மேலும் குத்தகைக்கு எடுக்கும்போது பனைச்சொந்தக்காரர்களுக்கு ரூ, 10—15 வரை குத்தகைப் பணமாகக் கொடுக்கவேண்டியிருக்கின்றது. இப்படி குத்தகைக்குப் பனைகளை எடுத்து குறைந்த வருமானத்தைக் கொடுக்கும் பதநீரை யார்தான் சீவ முன்வருவார்கள். எனவே அரசாங்கம் குத்தகை முறையை ஒழித்து சீனி உற்பத்தியைப் பெருக்க உதவி செய்ய வேண்டும்.


சீனி உற்பத்திச்சாலையின் வெளிப்புற அலுவல்களில் பனைகளில் ஏறி பாளைகளை வரிந்துகட்டி பின் அடித்துக் கசக்கி பாளையின் உள்ளமைப்பை (கலங்களை) சிதைத்து பாளையின் நுனியைச்சீவி பதநீர் வடிய வழிவகுத்தலும் ஓர் கஷ்டமான கட்டமாகும். இருப்பினும் இவ்விதமான தொழிலை பதநீர்க்காலத்துக்கு ஒருமுறை பாளைக்கு ஒருமுறைதான் செய்யப்படுவதால் இத்தொழிற்சாலை பொறிமுறை மயமாக்கவேண்டியஅத்தியாவசியம் இல்லை. இதனால் ஏற்படும் செலவும் குறைந்ததே,

பாளைகளின் நுனிகளைச்சீவி பதநீரின் ஊற்றை அதிகரிக்கச் செய்வதுவும் பாத்திரங்களில் (முட்டிகளில்) சேர்ந்த பதநீரை கீழே இறக்குவதும் நாள்தோறும் செய்யப்படவேண்டிய முக்கிய தொழிலாகும். இத் தொழிலுக்குத்தான் அதிக செலவும் ஏற்படுகின்றது. நெஞ்சுநோக, கால்வலிக்க கையுளைய பனையேறி இறங்குதல் ஓர் எளிமையான தொழிலல்ல. அதுவும் மழை பெய்து நனைந்த பனைகளில் ஏறிஇறங்குவது இன்னும் கஷ்டமானது. உயிருக்கு ஆபத்தானதும் கஷ்டமானதுமான இந்தத் தொழிலை யார்தான் நாள்தோறும் செய்ய முற்படுவர்.

## உற்பத்திச் செலவு

சீனி உற்பத்தியில் அதிக செலவை உண்டு பண்ணுவது சீனி உற்பத்திச் சாலையின் வெளிப்புறஅலுவல்களே. அதிலும் பனைகளைக் குத்தகைக்கு எடுத்தலும் நாள்தோறும் பாளைகளின் நுனிகளைச்சீவிபதநீரின் ஊற்றை அதிகரிக்கச் செய்வதுவும் பாத்திரங்களில் சேர்ந்த பதநீரை கீழே இறக்குவதுமே. ஒரு கலன் பதநீரில் இருந்து கிட்டத்தட்ட ஒரு ரூத்தல் சீனியைப் பெறலாம். ஒரு பனையில் ஒருநாளைக்கு சராசரியாக ஒரு கலன் பதநீர் வடியலாம். ஒரு நாளைக்கு ஒரு பனையில் ஏறி இறங்கக் கூலி சுமார் 1ரூ. 50ச—2 ரூபாவரை. ஒரு பனைக்கு ஒரு நாளைக்கு குத்தகைச் செலவு 10-15சதமாகும்.

தற்போது ஒரு ரூத்தல் பனஞ்சீனியை இலங்கையில் தயாரிக்க ஏற்படும் மொத்தச் செலவு 3ரூ. 25ச—3ரூ. 50ச. ஆகும். இவைகளிலிருந்து ஒரு ரூத்தல் பனஞ்சீனியை தயாரிக்கும் போது பனைகளில் ஏறிச் சீவுதலுக்கும் வடிந்தபதநீரை கீழேகொண்டுவர உண்டாகும் செலவும் குத்தகைச்செலவுமாகச் சேர்ந்து 1ரூ. 65ச—2ரூ. 15சதம் வரை செல்லுகின்றது. அதாவது ஒரு ரூத்தல் சீனி தயாரிக்க ஏற்படும் செலவில் 50—60% மேற்கூறிய தொழிற்கட்டங்களுக்கு மாத்திரம் செலவு செய்யப்படுகின்றது. எனவே இச்செலவைக் குறைத்து மலிவாக பனஞ்சீனியைப் பெற வழி வகைகளைத் தேடுதல் அவசியமல்லவா? அதேபோல் இதிலுள்ள கஷ்டங்களைக் குறைக்கவும் வழி தேடவேண்டுமல்லவா?




பாளை சீவும் கருவியின் விளக்கப் படம்

பாளை சீவுவதற்கான கருவி

## பொதுமுறை ஆக்கல்

இப்படியான இக்கட்டான நிலையிலிருந்து தப்புவதற்கு பொறிமுறைமயமாக்கல் கொள்கையைப் பயன்படுத்தலாம் வடிந்த பதநீரால் நிரம்பப்பெற்ற பாத்திரங்களை (முட்டிகளை) பனைகளில் ஏறி இறக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை இல்லாமல் செய்யலாம். எப்படியெனில் பதநீரைச் சேகரிக்கும் பாத்திரங்களின் அடியில் துளையிட்டு அத்துளைவாயிலை இறப்பர் குழாய்களின் உதவியுடன் தொடுத்து அக் குழாய்களை நிலத்தில் உள்ள பாத்திரங்களில் விடும்போது பதநீரானது படிப்படியாக வடிந்து கீழே உள்ள பாத்திரத்துள் சேமிக்கப்படும். இதற்கு உண்டாகும் செலவும் மிகக்குறைந்ததே.

சீவல் தொழிலாளர்கள் பதநீர் நிரப்பப்பெற்ற பாத்திரங்களை கீழே இறக்குவதற்கு மட்டும் நாள்தோறும் பனைகளில் ஏறுகின்றார்கள் என்று இல்லை. இவர்கள் காய்ந்து ஊற்றுக் கண்கள் அடைபட்ட பாளை நுனியைச் சீவி பதநீரின் ஊற்றை அதிகரிக்கச் செய்யவும் தான் நாள்தோறும் பனைகளில் ஏறவேண்டியிருக்கின்றது. இந்தத் தொழிலையும் கீழே இருந்தபடி ஓர் எளிமை

(9-ம் பக்கம் பார்க்க)

# ஜயந்தி

வேலை ஏற்றுக்கொண்ட வாரத்தில் மாதம் முடிந்து புதிய மாதம் பிறந்திருந்த தாய் மாதாந்த சீசன் டிக்கட் பெற்றுக்கொள்ள என் கவுண்டர் முன் கூடிய கூட்டத்தில் பள்ளிச்சிறுர் மத்தியில் ஒரு தினம் ஜயந்தியை மீண்டும் சந்திக்கவும் இரண்டொரு வார்த்தை பேசவும் நேர்ந்தது. ஆனந்தாகக் கல்லூரி மாணவி என்பதையும் தினமும் இதே பாதையாகக் கல்லூரிக்குப் போய் வருகிறுளென்பதையும் அப்பொழுது தெரிந்துகொண்டேன். அது முதலாக அவள் போய்வரும் நேரம் என் கணிப்பில் பதிவாகி நினைவில் பெற்று நாளாக நாளாகக் கடிகார முள்ளில் அதனை எதிர்நோக்கும் ஒரு மனப்பழக்கமுமாக அது திரண்டுருப்பெற்றது. அவளும் அதே மனநிலை வசப்பட்டாள் போல் தினமும் டிக்கட் கவுண்டர் கடந்து மாணவியருடனே கூடக் கல்லூரி ஏகியபோதும் வீடு திரும்பியபோதும் கவுண்டர் யன்னலூடாகக் கடிகாரத்தில் மணி பார்க்கும் பாவனையாக என் முகம் நோக்கி இரத்தினமும் மாணிக்கமும் சிந்தும் அவளுக்கே உரியதான அந்த ஒரு மென்முறுவலை உதிர்த்து எனக்குக் காணிக்கை சமர்ப்பித்து ஏகினுள்.

ஒரு சமயம் மாதம் பிறந்து மாதாந்த சீசன் டிக்கட்டுகள் வழக்கமாகக் கொடுத்தொழிந்த ஒரு வாரத்துக்குள்ளாக, ஜயந்தி என் முன்னிலையில் பயணச்சீட்டுப் பெறத்தோன்றினுள். கைக்குள்ளிருந்த சில்லறை நாணயத்தைக் கவுண்டர் மேசையில் வைத்து அதனை என்முன் நகர்த்தியபோது, அவள் கேட்ட டிக்கட் ஒன்றை டிக்கட் அடுக்கில் இழுத்தெடுக்க என் கைகள் தாஞக விரைந்து செயல்பட, 'ஏன் உமக்கு மாத டிக்கட் உண்டல்லவா அதற்கு என்ன நேர்ந்தது ஜயந்தி?', என்று மெல்லவாய் அவள் காதுக்குள்ளே பேசி, வினவினேன்.

'அதனைத் தொலைத்துவிட்டேன் சேர்! நினையாப்பிரகாரமாக நடந்துவிட்டது!' என்றுள் முகவாட்டத்துடனே.

'ஓ! அப்படியாகிப் போச்சோ! அப்போ உன் பெற்றோருக்கு அது ஒரு வீண் பண நட்டமாக அவர்களைச் சங்கடப்படுத்தியிருக்கும்?'

'அது சங்கதி இன்னும் என் வீட்டுக்காரருக்குத் தெரியவராது. என் கூடவரும் பள்ளி மாணவத் தோழியர் தினமும் பணம் கொடுத்து உதவுகிறுர்கள்!' என்றுள்.

'வீட்டிலே தெரியவந்தால் சில சமயம், 'அப்போ எழும் கோபத்திலே பள்ளிப்படிப்பை நிறுத்திவிடவுங்கூடம்?;

'ஓம்' என்று மொழியும் பாவனையில் தலையசைத்து நின்றுள்.

'பரிதாபத்துக்குரிய அந்நிலை சம்பவிக்கக்கூடாது ஜயந்தி. மாதம் முடியும்வரை தினமும் கையில் காசு தேடி ரயில் டிக்கட் வாங்கி பள்ளிக்கூடம் போகிறதென்பதும் மாணவர்க்கு உகந்ததல்ல. திடுக்கென்று ஒருநாள் வீட்டுக்காரர் முன்னிலையில் ரயில்வே டிக்கட் பரிசோதகர் எதிரே விழித்து நின்றுல் போல் அசந்துபோய் நிற்கவும் நேரிடலாம். இந்நிலையில் என்ஞல் ஆகக்கூடிய சிறு உதவியாக ஒன்றுசெய்யலாம். ஆனுல் அதனை நீர் மறுக்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இதோ இப்போதான் ஒரு மாத்தறைப்பிரயாணி அவசரம் அவசரமாக ஓடிவந்து டிக்கட் வாங்கிக்கொண்டு மீதிப் பணத்துக்குக் காத்து நிற்காமலே ரயிலைப் பிடிக்க ஓடிப் போனுர். மாத்தறைக் கோச்சில் அந்தாள் இந்நேரமட்டில் போய்ச்சேர்ந்திருப்பார். அவர் பணம் என் கையில்தான் இருக்கிறது. உனக்கு ஒரு மாத டிக்கட் கொடுத்துப் போக அதற்குமேல் மீதிப்பணமும் கூடக் கொஞ்சம் வரும். உமக்கென்றே நடந்ததுபோல் ஆகியிருக்கு.'

என் முகத்தையே பார்த்து மௌனம் பூண்டு நின்றுள் அவள்.

'உமது விருப்பத்தைச் சொல்லும்! அந்தப்பணத்தை முழுதாக உமது கையில் தந்துவிடவா அல்லது அதற்கு மாத டிக்கட் ஒன்று தரவா?' நான் தொடர்ந்து கேட்டும் அவள் அதற்கொன்றும் வாய்திறந்து பேசாமலே எட்ட நடந்து வரும் சகமாணவியரைத் திரும்பிப்பார்த்துவிட்டு நின்றுள்.

'நீர் எதுவுமே சொல்கிறீர் இல்லை. மாதாந்த டிக்கட் ஒன்று கொடுத்து மீதிப்பணத்தையும் உமது கையில் தருகிறேன்; வாங்கிக்கொள்ளும்' என்று கூறி மாத டிக்கட்டினையும் மீதிப்பணத்தையும் அவள் கையில் வைத்தேன்.

இன்னமும் பேசாமடந்தையாய் கற்சிலையாய் நின்றவளிடம் தொடர்ந்துசொன்னேன்;

'பொதுசன ஊழியர்களாக வேடம்பூண்டுவிட்டாலே இது மாதிரிக் காரியங்கள் கூடச் சில சமயங்களில் நமது கடமைப்பொறுப்பாகி விடுகிறது. உமது பெற்றோர் உம்மிடத்தில் எதனையோ எதிர்பார்த்துத்தானே சிரமப்பட்டுப் பணம் செலவிட்டு உம்மைத் தினமும் பள்ளிக்கு அனுப்புகிறுர்கள். ஆனுல் அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அதனைத் தேடித்தந்து அவர்களைத் திருத்திப்படுத்துவது நீர் கண்ணுங்கருத்துமாய் இலங்கிடவேண்டியது உமது முதற்கடமை, ஜயந்தி!

'நிரம்ப நன்றி மாத்தயா'- குரலிலே நன்றி உணர்ச்சி கனிந்தொழுகக் கூறி என்னிடம் டிக்கட்டும் பணமும் பெற்று நின்றவள், கல்லூரித் தோழியர் அண்மித்துவந்த மாத்திரத்தே அங்கிருந்து சிட்டாக ஓடி அவர் தம்கூடப் போய் மறைந்தாள்.

தாயகத்துக்கு அப்பால் புதியதொரு பூமியில் பட்டணத்து நேசப்பறவை ஒன்றின் நட்புறவு நெஞ்சம் குலவியதொரு கவிதையாக முகிழ்ந்தது இவ்விதமாகத்தான்.

(தொடரும்)

அ. செ. மு.

## தேனீயின் பிரயாணம்

பட்டுப்பூச்சி மோப்ப சக்தியில் தலைசிறந்தது. அது ஆகாயத்தில் 6.8 மைல் தூரத்திலுள்ள தன் பெட்டையின் பாலுணர்வு சமிக்ஞைகளை எளிதில் அறிந்து கொள்ளுமாம். உழைப்பில் தேனீக்கள் சிறந்தவை என்பதைப் புள்ளிவிவர அடிப்படையில் விலங்கியலாளர் நுனித்தறிந்துள்ளனர். ஒரு கிலோ தேன் உற்பத்தியாக்க ஒரு தேனீ 1,50,000 தேன் துளிகளைப் பூவிலிருந்து சுமந்துவர வேண்டும். தேன் கூட்டிலிருந்து மலர்வனம் 1,500 மீட்டர் தூரத்திலிருந்தால் தேனீ ஒரு துளி தேனைச் சுமந்துவர 3 மீட்டர் தூரம் வரை பறக்கவேண்டியிருக்கும். ஆகவே ஒரு கிலோ தேனைச் சேர்க்க அது மேற்கொள்ளும் பிரயாணத் தூரம் 4,50,000 கிலோ மீட்டர். அதாவது பூமியைச் சுற்றி 8 முதல் 11 தடவை செய்யும் பிரயாணத்துக்குச் சமம்.

## அராபிய மானின் அபார சக்தி

உயரம் தாவுதலில் ஒப்பற்ற வீரர்கள் விலங்குகள், கங்காரு 30 அடி உயரத்தையும், அராபிய மான் 50 அடி உயரத்தையும் அலட்சியமாகத் தாண்டிவிடுமாம். ஆபிரிக்காவிலுள்ள 5 அங்குல நீள ஜெர்போவா என்ற பிராணி 15 அங்குலத்தை எளிதில் தாண்டிவிடும். ஆறடி மனிதன் தாண்டுவது 6 அடிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

பங்கக் கொம்புடைய கறுப்பு மான் மணிக்கு 60 மைல் வேகத்திலும் கறுப்பு ஆண் மான் மணிக்கு 65 மைல் வேகத்திலும் சிறுத்தைப்புலி மணிச்கு 70 மைல் வேகத்திலும் ஓடக்கூடியவை.

★

## யானையின் துதிக்கை

யானையின் துதிக்கையில் 40,000 சுற்றுத் தசைகளுள்ளன. இயற்கையிலேயே மிக வலிவான உறுப்பு யானையின் துதிக்கையே எனினும் யானையானது மிக எளிதாக இதனைச் சுழற்றிப் பயன்படுத்தும்.

★

## 48 கோடி முட்டை

கடல் பிராணிகள் அசாதாரணமாக முட்டையிடுபவை. அமெரிக்கக் கடலில் வாழும் சிப்பி (Oyster) ஆண்டு ஒன்றுக்கு 50 கோடி முட்டை இடுமாம்!

கடல் முயல் என்ற ஒருவகை விலங்கு 4 மாதங்களில் 48 கோடி முட்டைகளை மாலை போன்ற சங்கிலித் தொடராகப் போடுமாம்.

வட அட்லாண்டிக் கடல் ராட்சத மீன் 20 அடி நீளமுடையது. 35 சுரணைக்கொம்புகளையும், 14 அங்குல அகலக்கண்களையும், அநேக டன் எடையும் கொண்டது.

ஆர்க்டிக் கடற்பறவை ஆர்ச்டிக் பனிச்சிகரத்திலிருந்து அன்டார்க்டிக் வரை 22,000 மைல் வரை பறந்து, துருவ கோடைச் சுற்றுலாவில் மகிழ்ச்சியடையுமாம்!

(வெள். நிரு.)

'அகாடமி' பரிசு

# 'ஆஸ்கா'ரின் அரை நூற்றாண்டுக் கதை

1927-ம் ஆண்டு மே மாதம் 'ஹலிவூட்' (அமெரிக்கா) டில் 36 பிரத்தியேக உறுப்பினர்கள் கூடி திரைப்படக்கலை விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு ஒரு கலாநிலையம் ('அகாடமி') நிறுவினர். இவ்வுறுப்பினர்களுள் சினிமா ஜாம்பவான்களான தயாரிப்பு நிர்வாகத்தில் சிறந்த லூயிட் பி. மேயர், ஜாக் எல். வாணர் மற்றும் நடிகர்கள் மேரி பிக்ஃபோர்ட், டக்ளஸ் ஃபேர்பாங்ஸ் ஆகியோரும் இருந்தார்கள். இன்றோ, சுமார் 3400 தீவிரமான ஈடுபாடுள்ள உறுப்பினர் இவ்வமைப்பில் உள்ளனர். இவர்களுள் சினிமாத்துறையில் சகல முக்கிய பிரிவுகளிலும் சம்பந்தப்பட்ட நடிகர், படப்பிடிப்பாளர், தயாரிப்பு நிர்வாகிகள், இயக்குநர்- தொகுப்பாளர், இசைக்கலைஞர், இசையமைப்பாளர், எழுத்தாளர், ஒலி, கலையமைப்பு மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்கள் என பல தரப்பினரும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அழைப்பின் பேரிலேயே உறுப்புரிமை வழங்கப்படுகிறது. 36 ஆளுநர்கள் கொண்ட சபை இந்த உறுப்புரிமையை அங்கீகரிக்கிறது.

சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கிளையும் தனது பங்கிற்கு இரண்டு திரைப்படத் தயாரிப்பில் ஈடுபடவேண்டியது அவசியம்.

இக்கலாநிலையத்தின் நோக்கம் திரைப்படத் தொழிலின் கலைத்தரத்தை உயர்த்துவதும் திறமைக்கு முதலிடம் அளித்து கௌரவிப்பதுமாகும். பிரமாண்டமான நூல்நிலையம் ஒன்றையும் போஷிக்கிறுர்கள். தவிர கலைத்துறை மாணவருக்கு புலமைப்பரிசு வழங்குவதோடு சினிமாத்துறையில் பங்கேற்று சிறந்த பணிபுரியும் மாணவர்களுக்கு தனியே பரிசுகளும் அளிக்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் மிகச் சிறந்த சாதனைகளுக்கான பரிசுவழங்குதலே இந்நிலையத்தின் மிகப் பிரபலமான சேவை. 1929 மே மாதம் 6-ம் திகதி நடந்த முதலாவது விழாவில்பதினெரு பரிசுகள் மட்டுமே வழங்கப்பட்டன. ஆனுல் இன்று 50 ஆண்டுகளுக்குப்பின்னர் பல நூறுபேர்கள் பரிசாக 'ஆஸ்கார்' என்ற தங்கச் சிற்பத்தை பெற்று தமது திரைக்கலைச் சாதனைகளுக்காக கலாநிலைய முன்ஞேடிகளால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அரசு சார்பற்ற ஆனுல் சக தொழில் வல்லுநர்களை உறுப்பினர்களாகக்கொண்ட இந்நிலையம் வழங்குவதால் 'ஆஸ்கார்' சினிமாத்துறையிலே ஒப்பற்ற பரிசாகும். பரிசுகள் பெறுபவர்களை சகல உறுப்பினர்களதும் வாக்களிப்புமூலம் தெரிவுசெய்கிறுர்கள். கலைத்துறை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கிளையும் தமக்குகந்த வகையில் தனிநபர்களை தெரிகிறுர்கள். ஒவ்வொரு கிளையும் அதிகப்படியாக ஐந்து நபர்களை மட்டுமே கடைசியாகத் தெரிவுசெய்யலாம். தெரிவுகள் முடிவுற்றதும் நிலையம் தெரிவு சம்பந்தப்பட்ட திரைப்படங்களை உறுப்பினர்களின் ஆய்வுக்காக திரையிடும். பின்னர் உறுப்பினர்களுக்கு முடிவான ஒரு தெரிவு ஜாபிதா தயாரிக்கப்பட்டுத் தரப்படுகிறது. இந்தத் தெரிவுகளுக்கான மதிப்பெண்கள் அளிக்கப்பட்டு, பிரைஸ் வாட்டர்ஹௌஸ் என்ற பதிவுபெற்ற கணக்காய்வாளர் நிறுவனத்திற்குஅனுப்பப்படும். இந் நிறுவனம் வரிசைப்படுத்தி ஜாபிதா தயாரிக்கும்.

கௌரவிக்கப்படுவோர் பெயர்கள், கலாநிலையஆண்டு பரிசளிப்புவிழாவில் மட்டுமே அறிவிக்கப்படும். உலகத்தின் பல பாகங்களில் இலட்சக்கணக்கான மக்கள் இவ்விழா நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் ஆவலுடன் கண்டுகளிக்கிறுர்கள்..

'ஆஸ்கார்' என்ற தங்கச் சிலையை 1928-ம் ஆண்டு ஜார்ஜ் ஸ்டேன்லி என்ற 24 வயதுச் சிற்பியைக் கொண்டு தயாரிக்கச் செய்தார்கள். 1074 அங்குல உயரத்தில் ஆள் உருவம், நீள பட்டாக்கத்தியில் கைகளை ஊன்றியபடி ஒரு ஃபிலிம் சுருளின் மேல் நிற்பாாக உள்ளது இவ்வுருவம். ஜயார்ஜ் ஸ்டேன்லி 1970-ம் ஆண்டு மறையும் வரை சிற்பக்கலையில் தீவிர ஈடுபாடுள்ளவராயிருந்தார். எனினும், 'ஆஸ்கார்' சிலையே அவரது படைப்புக்கள் யாவற்றிலும் மிகப்பிரசித்தியும், சிறப்பும் பெற்ற வடிவமாக விழங்கியது.

எம். ஜி எம். திரைப்பட நிறுவனத்தைச் சேர்ந்த கலை இயக்குநர், செட்ரிக் கிப்பன்ஸ் இச்சிலையை ஒரு வரைபடமாக கலாநிலையத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பினுர். ஸ்டேன்லியையே இந்தச் சிலையை வடிக்கத் தேர்ந்தெடுத்தாரெனினும் தனது வரை படத்தை அவரிடம் தராமலே, சிற்பத்தின் அமைப்பை மட்டும் விவரித்தார். மூன்று விதத்தில் சிற்ப அமைப்பை கிப்பன்ஸின் தெரிவிற்காகத் தந்தார். இன்றுள்ள சிற்ப வடிவு ஆரம்ப நிலையில் இருந்து எவ்வளவு மாறுதல் அடைந்துள்ளது என்பதை சிற்பிகூற விரும்பவில்லை. இச்சிற்பத்திற்காக 'மாடல்'ஆக எவரையும்தான் பயன்படுத்தவில்லையென்றும் அது தமது கற்பனை உருவம் என்றும் தெரிவித்துள்ளார்..

-கே. வி. பத்மநாபன்

## வயிற்றில் கற்கள்

திமிங்கிலம், ஆர்ச்டிக் குளிர் பிரதேச நீர்நாய் ஆகியவற்றின் வயிற்றில் 350 முதல் 500 கிராம் வரை எடையுள்ள கற்கள் ஏராளமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கடல் விளங்குகள் அடிக்கடி இக்கற்களைக் கடற்சுரையில் உள்ள மணல் திட்டுகளில் வாந்திபண்ணிவிடுமாம்.

(வெள்ள. நிரு.)

# மு. கனகராஜனின் 'முட்கள்'

கவிதைகள் ஆரம்பக்காலத்திலிருந்தே ஓசையுடன் கூடிய, யாப்போடமைந்த ''செய்யுள்''களாகவே எழுதப்பட்டு வந்துள்ளன. எனவே தற்காலத்தில் எழுதப்படும்கவிதைகளிலும் ஓசையுடனும், யாப்போடும் அமைந்த கவிதைகள் யாவும் ''மரபுக் கவிதைகள்'' என்றும், யாப்புக்கோ, ஓசைக்கோ முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் எழுதப்படும் கவிதைகள் யாவும் ''புதுக்கவிதைகள்'' என்றும் வழங்கப்படுகின்றன.

ஆரம்பக் காலத்திலிருந்தே கவிதைகள் ''செய்யுள்''களாகவே எழுதப்பட்டு வந்தபோதிலும் கூட, இக் கவிதைகளின் ஓசை, யாப்பு, வடிவம் ஆகியனவற்றில் காலத்துக்காலம் மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளதை அவதானிக்கமுடிகிறது. உதாரணமாக வெண்பா, கலிப்பா, விருத்தம் என்று பாரதியின் பழகு தமிழ்க் கவிதை வரை இம்மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே கவிதைத்துறையில் காலத்துக்குக்காலம் ஏற்பட்டு வந்துள்ள பரிணாமவளர்ச்சியின் ஒரு கட்டம்தான் இன்றைய புதுக் கவிதை எனலாம்.

தமிழ்நாட்டில் போல ஈழத்திலும் இன்று புதுக்கவிதைத் தொகுதிகள் பெருமளவுவெளியாக ஆரம்பித்துள்ளன. உதிரிகளாக வெளிவரும் புதுக்கவிதைகளைப் பொறுத்தவரை புதுக்கவிதைகளினதும், புதுக் கவிதையாளர்களினதும் பட்டியல் தமிழகத்தையே விஞ்சிவிட்டது எனலாம். ஆயினும் இப்பட்டியலிலிருந்து எத்தனை கவிதைகள் தேறும்- எத்தனை கவிஞர்கள் தேறுவார்கள் என்பது வேறு. புதுக்கவிதைகளைப் பற்றிச் சரியாக அறியாமல், புதுக்கவிதை என்ற பெயரில் வெளிவரும் சில வசன முறிவுகளை வாசித்துவிட்டு, தாமும் எழுதலாம் என ஆரம்பித்த புதுக்கவிதையாளர்களே மிக அதிகம். அக்கவிதைகளை வாசித்தபின்னும் புதுக்கவிதையைக் ''கவிதை'' என்று கருத யாராவது முன்வருவரா? எனவே புதுக்கவிதை எதிர்ப்பாளர்கள் உதாரணம் காட்டக்கூடிய கவிதைகள் தாராளமாகக் கிடைத்தன.

ஆனல் மிகத்தரமான புதுக் கவிதைகளை வாசிக்கும் எவரும் புதுக்கவிதையைக் ''கவிதையல்ல'' என்று ஒதுக்கிவிட மாட்டார்களென்பது திண்ணம். ''முட்கள்'' தொகுதிக்கு முன்னுரை எழுதியுள்ள கலாநிதிகைலாசபதியின்கூற்று இதனை மெய்ப்பிக்கின்றது. அண்மைக் காலம்வரை புதுக் கவிதையின் பரமசத்துருக்களுள் ஒருவராக இருந்துவந்த திரு. கைலாசபதி, புதுக்கவிதையை இலக்கியஅந்தஸ்திற்கு உயர்த்திய ''வானம்பாடி''

## ஐவாத் மரைக்கார்

இயக்கத்தினரின் புதுக்கவிதைகளைக் ''கவிதை'' என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

தமிழகத்திலும் சரி, இலங்கையிலும் சரி இன்று மிகவும் தரமான புதுக் கவிதைகளை எழுதிவருபவர்களில்பலர்தமது புதுக்கவிதைப் பிரவேசத்துக்கு முன்னர் மரபுக்கவிதை எழுதியவர்களாகவே இருக்கின்றனர். மு. கனகராஜனும் முன்னைய மரபுக் கவிதையாளரேயாதலால் அவரதுபுதுக்கவிதைகளும் தரமானவைகளாகவே இருக்கும் என்ற நம்பிக்கை முனைப்புடன் ''முட்கள்'' தொகுப்பைப் புரட்டும்போது, கலாநிதி கைலாசபதியின்முன்னுரை ''முள்ளும் மலரும்'' என்ற தலைப்பில் காணப்படுகிறது.

அதனைத் தொடரும் நூலாசிரியரது முகவுரையின்சிலிர்ப்பைக் கடந்து கவிதைக்காவுக்குள் நுழையும்போது ''இலங்கை'' என்ற பொதுத் தலைப்பில் எழுதப்பட்ட ஐந்து கவிதைகள் முதலில் காணப்படுகின்றன. மு. கனகராஜன் ஈழத்திருநாட்டின் மீதுகொண்டுள்ள பேரபிமானமும் ,தேசிய உணர்வும் இக்கவிதைகளில் நன்குவெளிப்படுகின்றன. இக் கவிதைகளையடுத்து, யாழ்ப்பாணம் பற்றி அவர் எழுதியுள்ள ஒன்பது கவிதைகள், தான் பிறந்த பிரதேசத்தையும் அவர் மறக்கவில்லை என்பதைக் காட்டுகின்றன.

இக்கவிதைகளை வாசிக்கும் போது இன்னுமொருசிந்தனைச் சிலிப்பும் இடைச்செருகலாக எமக்குஏற்படுகின்றது. பிறந்த பொன்னட்டிற்கு முதலிடத்தையும், பிரதேசத்திற்கு அடுத்த இடத்தையும் வழங்கியிருப்பதன்மூலம் தேசிய ரீதியில் கவிஞர் மு. கனகராஜன் கொண்டுள்ள கருத்தை அறியக் கூடியதாக உள்ளது. ''சகோதரர்'' (பக். 23)என்ற கவிதையில் இக்கருத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

''............
இனியும்
சிங்களமென்றும்
தமிழனென்றும்
சந்தி சிரிக்க வேண்டாம்
சகோதர ரென்றெ
வாழ்வோம்.''

ஈழத்தின்மேல் அபரிமிதமான பற்றைக் கவிஞர் கொண்டிருந்தாலும் அந்த-ஈழம் எப்படிப் பட்டதாக இருக்கவேண்டுமென்றுவிரும்புகின்ருர்? இதற்கு ''ஈழயுகம்'' (பக்.102) விடை தருகிறது.

''ஈரேழுடனே
அடுத்த கொடி
ஈழ யுகத்தில் அரசோச்சும்''


என்று கவிஞரின் உள்ளம் உறுதியும் கொள்கிறது. கனகராஜன் தனது பிரதேசத்தைத் தாய்நாட்டுக்கு அடுத்த இடத்தில் வைத்தாலும், அப் பிரதேசத்தின் மேல் கொண்ட காதல், நாட்டின் மேல் கொண்ட காதலுக்குச் சற்றும் சளைத்ததல்ல என்பது அக் கவிதைகளை வாசிக்கும்போது தெரிகின்றது. ''செம்மண்'' (பக்.32) என்ற கவிதையில் கவிஞர் பின்வருமாறு கூறுகிருர்;

''அக்கினிப் பிழம்பை
அருந்தி மலரும்
அன்னை நிலமே
எங்கள்
செந்நீரின் செறிவாலோ
செம்மண்ணய்ச்
செழித்தாய் நீ.

இதே கருத்தை வேருெரு கவிதையாகவும் தந்துள்ளார் எதிர்ப்பக்கத்திலேயே-

கொப்புளிக்கும்
வியர்வையோடு

(9-ம் பக்கம் பார்க்க)



யாழ். தட்டாதெரு கலாஜோதி சனசமூக நிலையத்தின் புதிய கலையரங்கத் திறப்பு விழாவில் இலங்கை-இந்திய வானொலி புகழ் பொப்பிசைப் பாடகர் திரு. ரமேஷ் வைகுந்தநாதனுக்கு 'மில்க்வைற்' தொழிலதிபர் திரு. கே. கனகராஜா பொன்னடை போர்த்தி, பொற்கிழி வழங்கிக் கௌரவித்த பொழுது எடுக்கப்பட்ட படம். யாழ். நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் 'பல்கலைச் சக்கரவர்த்தி' என்ற பட்டத்தை ரமேஷுக்கு வழங்கிப் பாராட்டினர். படத்தின் வலதுகோடியில் நீதிபதி காணப்படுகிருர். சனசமூக நிலையச் செயலாளர் திரு. சாந்தலிங்கமும் படத்தில் காணப்படுகிருர்.

# நமது நூல் நிலயம்

நூல்: மாவைக்கந்தன்
அன்புத் திருப்புகழ்
ஆக்கியோன்: அருட்கவி
சீ. விநாசித்தம்பி.
விலை: ரூபா 2-00.

திருப்புகழ் என்ற மாத்திரத்தில் அருணகிரிநாதர் நம் மனக்கண்முன் காட்சி கொடுப்பார்; பலவகையான சந்த இசைகளும் எம்மனத்தின் கண்ணே அலை அலையா எழும்; இன்பச்சுவை இனிதே நாவில் ஊறும். முருகப்பெருமானின் திருவருள் எம்மைத்தன்னுள் அடக்கும். மனத்துள்ளே தெய்வமாட்சிமை நிலை பெறும்; பூவுலகத்தை மறந்து சுவர்க்க உலகத்துக்கும் அப்பாற்பட்ட ஓர் அரிய பேரின்ப நிலைதோன்றும். எம்மை அறியாமலே நாம் இன்பசாகரத்துள் மூழ்கியிருப்போம். திருப்புகழை வயித்துப்பாடுபவர்களும் கேட்பவர்களும் இவற்றை நன்கு உணர்வார்கள்.

சரித்திரப் பிரசித்தி பெற்றதும், மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மும்மைப் பயன்களையும் ஒருங்கே தன்னுள் அடக்கி உள்ளதுமாகிய, முருகப் பெருமானின் திருத்தலம் மாவிட்டபுரம். மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் மாறி, நல்ல மனிதமுகம் உண்டாவதற்குரிய அரிய அற்புத நிகழ்ச்சி மாவிட்டபுரத்தில் நடந்துள்ளது.அன்று தொட்டு என்றைக்கும் இத் திருத்தலம் எல்லோராலும் பாராட்டற்பாலதாகிய தலமாக அமைந்துவிட்டது. மாவைக்கந்தன் மாப்பெருங் கருணாகரன். அம்முருகப் பெருமானைக் கற்ருேர் பலரும் பாடிப்புகழ்ந்து துதித்துள்ளார்கள்.

இவ்வரிசையிலே, அளவையூர் அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி அவர்களும் அமர்ந்துவிட்டார். அவர் இயற்றிய மாவைக்கந்தன் அன்புத் திருப்புகழ் அவருக்கு ஓர் அரிய புகழை ஈட்டிக்கொடுத்திருக்கின்றது. சமர்ப்பணம் தொடக்கம் தோத்திரம் ஈருக இந்நூலின்கண்ணே 25 செய்யுள்கள் அமைந்துள்ளன. சமர்ப்பணம் தவிர்ந்த ஏனைய பாடல்களுக்கெல்லாம் நூலாசிரியரே இராகம், தாளம் அமைத்துள்ளார், இச்செயல், இந்நூலைக் கற்பவர்களுக்குப் பெரிதும் உறுதுணைபுரியும். ஆன்றோர் வழக்கப்படி இந்நூலுள் முதற்கண் கணபதிக்குத் திருப்புகழ் பாடப்பட்டு, அதன் பின்னரே கந்தனின் மேல் திருப்புகழ்கள் 22 பாடப்பட்டுள்ளன. ஈற்றில் தோத்திரமுண்டு. எல்லாவற்றுக்கும் முதலில் சமர்ப்பணம் உண்டு. அஃது கலி விருத்தத்தால் பாடப்பட்டுள்ளது. சமர்ப்பணத்துக்கு முன்னுக 'மாவிட்டபுரம் முத்தமிழ்க்கலை மன்றத்தாரின் பதிப்புரை விளங்குகின்றது. பண்டிதர் மு. சந்தையா B A. அவர்கள் இயற்றிய 'மாவைப் பிள்ளைத் தமிழை' எமக்குத் தந்த முத்தமிழ்க் கலைமன்றம் இந்நூலையும் தந்து இறும்பூதெய்துவது வரவேற்கத்தக்கதே. பதிப்புரையின் முன்னுக இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்த்துரை வாழ்த்திக்கொண்டே இருக்கிறது. 'மாவை அன்புத் திருப்புகழ் மாவைத்திருமுருகன் அருட்பிரசாதம். நூலாசிரியரின் கவிதா சாமர்த்தியம் எத்துணையும் பாராட்டி அமையாது' என்று பாராட்டி வாழ்த்தியமைகின்ருர் பண்டிதமணியவர்கள். இதன் முன்னுகப் பலாலி ஆசிரிய கலாசாலை இசைப்பேராசிரியர் இசைமணி, பொன். முத்துக்குமாரு அவர்களின் அணிந்துரை அணிசெய்கின்றது. அருட்கவி அவர்கள் சந்தமொடு கூடிய சிந்தை நெகிழ வைக்கும் அன்புத்திருப்புகழ்ப் பாமாலையை அமிர்தமாக வடித்துள்ளார்கள்' என்பன போன்ற பல அணிகலன்களை அவர் இந்நூலுக்கு அணிந்துள்ளார். இதன்முன்னுக, சிவாகம வித்தியாபூஷணம், பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் அவர்களின் ஆசியுரை ஆசீர்வாதம் வழங்குகின்றது. 'அருட்கவி அவர்களின் இந்தத் தெய்வீகத் தொண்டு நீடூழிநிலை பெற்று வாழவேண்டுமென' அவர் ஆசீர்வதிக்கின்ருர்.

இந்நூலுள், தமிழ் கற்கும் இன்பம், பிறவியாலேற்படும் பலவகையான துன்பங்கள்,

(9ம் பக்கம் பார்க்க)

●

### காலநதி
(கதைத் தொகுதி)

ஆசிரியர்கள்: காவலூர் ஜெகநாதன், கணபதி கணேசன், ஏ. எஸ். உபைத்துல்லா.

விலை: இரண்டு ரூபா.

ஆங்காங்கே சிதறல்களாக வெளிவரும் படைப்புக்கள் நூலுருப் பெறும் பொழுது அது எதிர்காலத்தில் நிலைத்த தன்மையையும், வரலாற்றுக் கவனிப்பையும் பெறும். அவ்கையை நோக்கும் பொழுது அண்மையில் வெளிவந்த 'கலாநதி'யிலுள்ள கதைகள் பொறுப்புணர்ச்சியுடன் தேர்வுசெய்யப்படவில்லை என்பதை இக்கதையிலுள்ள சாவலூர் ஜெகநாதனுடைய கதைகள் புலப்படுத்துகின்றன.

'கலாநிதி' என்ற காதல் கதையை இன்னும் சிறப்பாக சிருஷ்டித்திருக்கலாம் 'தகுதிகள் பிறப்பினுல் வருவதில்லை' கருத்து முதன்மைப்படுத்தி எழுதப்பட்டது. மற்றைய இரு கதைகளும் இனக்கலவரத்தைப் பின்னணியாகக்கொண்டவை. இத்தகைய பிரச்னைகள் இன்னும் ஆழமாக நோக்கப்படவேண்டும். பல தரமான சிறுகதைகள் எழுதிய இவரால் இத்தொகுதிக்குப் பெருமை சேர்க்க முடியவில்லை.

'கலாநதி' கதைத்தொகுதி கணபதி கணேசன், உபைத்துல்லா ஆகிய இரு நவசிருஷ்டியாளர்களை இனங்காட்டுவதன் மூலம் சிறப்பான கவனத்தைப்பெறுகிறது.

கணபதி கணேசனின் 'ஒரு தாழம்பூ அர்ச்சிக்கப்படுகின்றது' மனித இதயங்களின் மானசீகமான அன்பும், பாசமும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் மனித இனம், மனித இனமாக வாழமுடியும் என்ற கருத்தை வெகுசிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது. 'புதுயுகம்' மலர்கிறது. இனக் கலவரத்தின் பின்னணியில் உணர்வூற்றுச் சித்திரமாகப் புனையப்பட்டுள்ளது.

ஏ. எஸ், உபைத்துல்லாவின் 'கடலின் குழந்தைகள்' கிழக்கு மாகாண பிரதேச மீனவக்களத்தில் எழுதப்பட்ட 'எனது தோணி' கதைக்குப் பின் எழுந்த தரமான படைப்பாகும். மூதூர் பிரதேசத்தில் வாழும் மீனவர்களின் வாழ்க்கை நிலையை 'கரீம்' என்ற பாத்திரத்தின் மூலம் உயிர் துடிப்புடன் சித்தரித்துள்ளார். 'கடலின் குழந்தை' கதை பெற்ற சிறப்பை மண்ணின் மகன் பெறவில்லை என்பது சிறு குறைபாடே.

மொத்தத்தில் 'காலநதி' பாராட்டக்கூடிய முயற்சியாகும்.

-வ. அ. இராசரத்தினம்

# தமிழக நினைவுகள்-2

இராமேஸ்வர ரயில்நிலைய சம்பவம் எனக்கு ஒரு புதிய அனுபவத்தை உணர்த்தியது,

எனக்கு வழிகாட்டியாக வந்தவன் என்னிடம் பேசிய பேரம் என்னைத் திகைப்படைய வைத்தது.

நான் விரும்பியதை தரச் சொன்னவன். நான் இரட்டிப்பாகப் பணம் கொடுத்ததை வாங்க மறுத்ததுமல்லாமல் 'ஐந்து ரூபாய் தரும்படி அதிகாரத் தொனியில் கேட்டான்.

அவன் கேட்ட 'ஐந்து ரூபாய்' இந்திய பணத்துக்கு பத்து ரூபாய்க்கு சமமானது.

அவன் பிடிவாதமாக ஐந்து ரூபாய் கேட்டான் 'என்ன சார்...நீ ஐந்து ரூபாய்க்குக் கூட யோசிக்கிறேயே...'என்று என் உணர்வுகளைத் தூண்டிவிட்டான்.

நானும் பிடிவாதமாக ஐந்து ரூபாய் கொடுக்க மறுத்தேன். அருகில் நின்ற பொலிஸ்காரரை அழைத்து விஷயத்தை எடுத்துக் கூறினேன்.

நீதியை நிலைநாட்டவேண்டிய சட்டத்தின் காவலர் அவனுக்கு ஆதரவாகப் பேச ஆரம்பித்துவிட்டார்.

'போனு போகுது சார்... அவனுக்கு ஒரு அஞ்சு ரூபா கொடு...' என்ருர்.

...'நான் கோபமாக... நீங்கள் கூட இத்தகைய விஷயங்களுக்கு உடந்தையாக இருக்கிறீர்களே... நான் இதனை மேலிடத்துக்கு அறிவிக்கிறேன்...என்று தர்மாவேசத்தோடு கூறினேன்.

பிறகு...அவரும் சமாதானம் பேச ஆரம்பித்துவிட்டார்.

இரண்டு ரூபா நோட்டைக் கொடுத்துவிட்டு ரயிலை நோக்கி நடையைக் கட்டினேன்.

ரயிலில் ஏறி அமர்ந்ததும்... இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று எனக்குள் நானே முடிவெடுத்தேன்.

ரயிலில் மானு மதுரையில் இறங்கி, உடனடியாக திருச்சி செல்லும் ரயிலில் ஏறி அமர்ந்துகொண்டேன். 'பசி' வேறு போராட்டம் நடத்தியது.

காரைக்குடியில் சிறிது நேரம் ரயில் நின்றது, ரயில் நிலைய கண்டீனில் இரண்டு இட்டலியையும் ஒரு காப்பியையும் அவசரமாக உள்ளே தள்ளிக்கொண்டேன்.

மீண்டும் ரயில் புறப்பட்டது. திருச்சி வரும்வரை என்மனம் ஒரு நிலையில் இல்லை.

திருச்சி ரயில் நிலயத்தைக் காலை ஏழு மணியளவில் ரயில் வந்தடைந்தது.

ரயில் நிலையத்தைவிட்டு வேகமாக வெளியே வந்தேன். கைக்கிள் ரிக்ஷக்காரர் என்னை வலிய அழைத்தார்கள்.

இராமேஸ்வரத்தில் ஏற்பட்ட முதல் அனுபவமே என்னுள்ளே கசப்பான நிலைமையை உருவாக்கிவிட்டிருந்தது. நடராஜர் சர்வீஸில் 'குறிஞ்சி ஒட்டலுக்கு' வந்தேன்.

குறிஞ்சி ஒட்டல் வாடகை அறையில் மின்னல் வேகத்தில் குளித்து உடை மாற்றிக் கொண்டேன்.

ஒட்டல் முதலாளியிடம் திருச்சி எம். பி. திரு. கல்யாணசுந்தரத்திடம் தொடர்பு கொள்ளவேண்டும். அவரது தொலைபேசி எண் தெரியுமா? என்றேன்.

திருச்சி எம். பி. கல்யாணசுந்தரத்தைக் கேட்டதும் அவர்கள் என்னையும் ஒரு முக்கிய பிரமுகராக மதிக்கத்தொடங்கினுர்கள்.

'திரு. கல்யாணசுந்தரம் இன்றுதான் டெல்லியிருந்து வந்தார்...பக்கத்தில்தான் அவர் தங்கியிருக்கும் இடம் இருக்கிறது என்று ஓட்டலில் பணியாற்றும் ஒருவரிடம் எனக்கு வழிகாட்டும்படி கூறினுர்கள்.

நான் திரு.கல்யாணசுந்தரம் அவர்கள் தங்கியிருக்கும் இல்லத்திற்குச் சென்றேன்.

கல்யாணசுந்தரத்தைச் சந்திப்பதற்கு பலர் அங்கே கூடியிருந்தார்கள். சுகவீனம் காரணமாக மாஸ்கோ வைத்தியசாலையில் இரண்டு மாதம் தங்கிவிட்டு இப்பொழுதுதான் நாடு திரும்பியிருந்தார்.

அங்கிருந்த ஒருவரிடம் நான் இலங்கையிலிருந்து வந்திருப்பதாகத் தெரிவித்தேன்.

திருச்சியில் எனக்கு திரு. கல்யாணசுந்தரத்தைத் தவிர வேறு யாரையும் தெரியாது.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி மாநாட்டில் பங்குபற்ற கொழும்பு வந்திருந்தபொழுது ''ஈழநாடு'' பத்திரிகைக்காக பேட்டிகாணப் போயிருந்தேன். அட்பொழுதுதான் அவருக்கும் எனக்கும் தொடர்பு ஏற்பட்டது.

தமிழக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும் இந்திய பாராளுமன்றத்தில் திருச்சி எம். பியாகவும் இருக்கிருர்.

நான் கலை, இலக்கிய மாநாட்டில் கலந்துகொள்வதற்குக் காரணம் திரு. கல்யாணசுந்தரம் தான்.

கொழும்பிற்கு திரு. கல்யாணசுந்தரம் வந்தபொழுது நடைபெற்ற கலைஞர்களின் சந்திப்பின் போது 'கலை, இலக்கியம் என்பது ஒரு வழிப் பாதையல்ல. இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதியால் ஏற்படும் பாதிப்பை'ப்பற்றிக் கூறினேன். அதே கூட்டத்தில் திரு! கல்யாணசுந்தரம் 'நீங்களே இந்தப் பிரச்னைகளைத் தமிழக கலை-இலக்கிய வாதிகளிடம் நேரில் சொல்லுங்கள்' என்று அழைப்பு விடுத்தார்.

காப்பி சாப்பிடுங்கள்...'என்றவாறு இலங்கைப் பிரச்னைகளைப் பற்றி அதிக அக்கறையுடன் கேட்டார்.

பிறகு...'நான் மாஸ்கோவிலிருந்து இரண்டு மாதங்களுக்குப் பின் இப்பொழுதுதான் நாடு திரும்பியிருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் விழுப்புரம் கலவர சம்பவங்களை நேரில் பார்க்கப் போகிறேன். நாளை மறுநாள் திருப்பூரில் சந்திப்போம்' என்ருர்.

அங்குள்ளவர்களிடம் என்னைத் திருப்பூர் கூட்டிச் செல்லும்படி பணித்தார்.

சட்டக்கல்லூரி மாணவரான திரு. கனகராஜிடம் என்னைக் கூட்டிப் போகும் பொறுப்பை ஒப்படைத்தார்கள்.

திருச்சியில் பல நண்பர்களைச் சந்தித்து உரையாட நண்பர் கனகராஜின் உதவி எனக்குப் பெரிதும் துணை புரிந்தது.

நண்பர் கனகராஜும் நானும் 'குறிஞ்சி' ஓட்டலுக்கு வந்தோம்.

நண்பர் கனக்ராஜிடமிருந்த

**அந்தனி ஜீவா**

அவர் சொன்னவுடன் மாத்திரம் நில்லாது தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்திடம் ஈழத்து பிரச்னைகளை எடுத்துக் கூறி எனக்கு அழைப்பு அனுப்பவும் ஏற்பாடுசெய்தார்.

அந்த அழைப்பிதழுக்கு இணங்கவே தமிழகம் சென்றேன்.

நான் வந்திருப்பதையறிந்து உடனே, என்னை வரவேற்று 'எப்பொழுது வந்தீர்கள்...

கலை, இலக்கிய பெருமன்ற நிகழ்ச்சி நிரலை வாங்கிப் பார்த்தேன்.

இலங்கையிலிருந்து நானும், எழுத்தாளர் செ. யோகநாதனும் கலந்துகொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

மற்றும் நிகழ்ச்சி நிரலிலிருந்த முக்கிய ஒரு பெயர் என்னை வியப்பிலாழ்த்தியது.

அந்தப் பெயர்?

(தொடரும்)

# உங்கள் கேள்விகளும் ஆவிகளின் பதிலும்

செல்வி.........
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகி) ஸ்ரேசன் ரோட், தெல்லிப்பழை.

நான் G. C. E. (O/L) ஆவணி மாதம் எடுக்கிறேன். சித்தியுண்டா?

சித்தி உண்டு.

நான்பிறநாட்டுக்குச்சென்று வேலை செய்வேனு?

உள்நாட்டில்தான் வேலை கிடைக்கும்.

எனக்கு எந்த வயதில் வேலை கிடைக்கும்?

அடுத்த ஆண்டு இறுதியில் வேலை கிடைக்கும்.

எனது சிநேகிதர்களால் ஏதாவது நன்மையுண்டா?

நன்மை இல்லை.

எனது எதிர்கால வாழ்க்கை எப்படி அமையும்?

சிறப்பாக அமையும்.

வி. ரி. வர்ணன்
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

நான் தொடர்ந்து படித்து பரீட்சையில் சித்தியடைவேனு?

அடைவீர்கள்.

வெளிநாடு செல்ல வசதியுண்டா?

கிடையாது.

அரசியல்-கலைத்துறை இவற்றில் என் பங்கு என்ன?

இவை இரண்டுமே உமக்கு வேண்டாம்.

நான் இதுவரையிலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என் கஷ்டம் எப்போது திரும்?

இன்னும் 3 வருடங்களுக்கு இப்படித்தான் இருக்கும்.

திரு. எம். என்.
பருத்தித்துறை.

எனது வாழ்வின் முன்னேற்றம் எப்போது?

திருமணத்தின் பிறகு.

திருமணம் எப்போது?

இன்னும் இரு ஆண்டுகளில்.

சுவீப் போன்ற அதிர்ஷ்டம் ஏதும் உண்டா?

இப்போது இல்லை. 40 வயதுக்கு மேல் உண்டு.

எதிர்காலம் எப்படி அமையும்?

நன்ருகவே அமையும்?

என்ன தொழில் எனக்குப் பொருந்தும்?

நிலையான தொழில் அமையாது.

---

கேட்டு எழுதுபவர்:

**வி. ரவிச்சந்திரன்**

---

செல்வி......
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசசி) யாழ்ப்பாணம்.

நான் க. பொ. த. உயர்தர பரீட்சை எழுதியுள்ளேன். சென்ற இரு வருடங்களும் எனக்கு திருப்தியளிக்கவில்லை. இம்முறை எப்படி அமையும்?

தோல்வியே.

என் வாழ்க்கையில் ஓர் உயர்ந்த லட்சியத்தை அடைவேனு?

முயற்சி திருவினையாக்கும்

நான் தொடர்ந்து படிக்கலாமா? வேலை பார்க்கலாமா?

வேலை பார்க்கலாம்.

நான் ஒருவரை விரும்புகிறேன். அவரை அடையத் தடைகள் உள்ளன. நாம்எப்போது சேர்ந்து வாழ முடியும்?

இரண்டு வருடங்களில் சேர்வீர்கள்.

நாங்கள் இருவரும் மகிழ்ச்சியாக இருப்போமா?

மகிழ்ச்சி நிலவும்.

நான் விரும்பியவருக்கு இன்னும் எத்தனைகாலத்தில் வேலை வாய்ப்புண்டு? அவர் தன் நிலையில் ஒரு உயர்ந்த நிலையை அடைவாரா? எந்த வழியில் முன்னேறமுடியும்?

அடுத்த ஆண்டு வேலை கிடைக்கும். கடினமுயற்சியின் மூலம் ஒரு உயர்ந்த நிலையை நிச்சயம் அடைவார்.

செல்வி றஜனி
ஆஸ்பத்திரி வீதி,
தெல்லிப்பழை.

அன்புள்ள ரவி அண்ணு. என்னை திருமணம் செய்ய ஒருவர் காத்திருக்கிருர். அவரைத் திருமணம் செய்ய நான் விரும்பவில்லை. அவர்தான் என் கணவராக வருவாரா?

தைரியமாக இருங்கள். வேறு நபர்தான் கணவராக வருவார்.

செல்வி ரி. ஏ.
யாழ்ப்பாணம்.

எனது தாயார் தலை சுற்றலினுல் அவதிப்படுகிருர். தலைக்கு ரத்தம் போவது குறைவு. அதனுல்தான் இது ஏற்படுகிறது என்று டாக்டர்கள் கூறுகிருர்கள், இந்நோய் சுகமாகுமா?

நாங்கள் சிபார்சு செய்யும் ஒரே வைத்தியர் ஆண்டவன்தான். அவனிடம் முறையிடுங்கள். மன்ருடுங்கள்.

நான் G. C. E. (A/L) பரீட்சை எடுத்துள்ளேன்? இதில் எனக்கு சித்தி உண்டா? இதைவிட எனக்கு உத்தியோகம் பார்க்கும் வாய்ப்பு உண்டா? வெளிநாடு செல்வேனு?

சித்தியடைவீர்கள், உத்தியோகம் கிடைக்கும். வெளிநாடு செல்லமாட்டீர்கள்

படித்துக் கொண்டிருக்கும் எனது ஒரே சகோதரனின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

பிறர் பாராட்டும் வகையில் வாழ்வான்.

என் எதிர்காலம் எப்படி அமையும்?

சுகத்திற்குக் குறைவில்லை.

# வெங்காயம்

வெங்காயம் இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, சீனு, பிரித்தானியா, பிரான்சு ஆகிய நாடுகளிலும் எல்லோரும் பயன்படுத்தப்படும் பொருள் என்ருலும் அதன் சிறப்பை அறிந்தோர் எத்தனை பேர்?

உணவு வகையில் வெங்காயம் மிகவும் சிறந்ததாகும். அதில் பலவித சத்துக்களும் பல நோய்களைத் தீர்க்கும் சக்தியுமுண்டு. இதில் கெந்தகச் சத்து நிறைய உண்டு. இச்சத்தினுல்தான் வெங்காயத்திற்கு அவ்வித மணமிருக்கிறது. இச்சத்து இருப்பதால் ஒருவித எண்ணை (Acrade Volahie Oil) அதில் பெறப்படுகிறது. மற்றும் வெண்புரதம் (Albumen) உயிருட்டி 'சி' சர்க்கரை, பிசின், நீர் மற்றும் பல வகையான உப்புக்களும், புரூவிட்டமின் A கரோட்டின் என்பனவும் நிறைந்து காணப்படுகிறது

உழைப்பாளிகள் தினம் வெங்காயத்தை நிறைய உணவில் சேர்க்கவேண்டும். குழந்தை தொடக்கம் முதியோர் வரை பாவிக்கக்கூடியது. கூடியளவு வெங்காயத்தை பச்சையாகப் பாவித்தால் பல நோய்களைத் தீர்க்க உதவும்.

இருதய இரத்த ஓட்ட நோய்களுக்கும் இரப்பை, குடல் நோய்களுக்கும் வெங்காயம் ஓர் அற்புத மருந்தாகும். இது இருதயத்தின் வேலையை மேம்படுத்துகிறது. குருதிக் குழாய்களை விரிவடையச் செய்கிறது. மற்றும் குருதிக்குழாய்களில் ஏற்படும் தடைகளை, கட்டிகளைக் கரைக்கும் தன்மை இதற்குண்டு. அதிகுருதி அமுக்கம் இரப்பைச் சீர்கேடுகள் ஆகியவற்றுக்கும் சிறந்தது. சீரண சக்தியைப் பெருக்கி, மந்தத்தைப் போக்கி சீரண உறுப்புக்களுக்குப் பலத்தைக் கொடுக்கின்றது.

குழந்தைகளுக்கு இருமல், சளி, தொண்டைக்கரப்பன் போன்ற வியாதிகளுக்கு வெங்காயச்சாற்றுடன் தேன் கலந்து கொடுக்க நன்மை பயக்கும்.

**-டாக்டர் இந்திரா தர்மலிங்கம்**

பெண்களுக்கு உண்டாகும் மாதவிடாய் கோளாறுக்கு இன்றியமையாதது. சூதகக் கட்டு, சூலைக்கு வெங்காயச் சாற்றை பனங்கட்டியில் கொடுத்தால் போதுமானது.

மேலும் திடீரென்று மயங்கி விழுந்தவருக்கு வெங்காயத்தை நசுக்கி மூக்கில் மணக்கக்கொடுத்து கொஞ்ச அறிவு வந்த பின் வெங்காயச்சாறும் நீரும் சம அளவாகக் கலந்து அருந்தக் கொடுக்கலாம்.

இதன் கிருமிகளைக் கொல்லும் தன்மையில் இது தாபிதங்களையும் ஆற்றவல்லது. வெங்காயத்தை மஞ்சளுடன் சேர்த்துரைத்துத் தாபிதமுள்ள கட்டிகளுக்குப் பூசினுல் வீக்கமும் வேதனையும் குறையும் சொறி, சிரங்கு, குருதி அழல், அக்க்ரம் தீரும்.

(9ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

**பொ. அம்பலவாணர்**

தங்க, வைர நகை வியாபாரம்.

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 7199, தந்தி: வைரம்.

# நாணத்தின் விலை என்ன?

*[மாணவ மணிகளின் நன்மைகருதி அவர்களுக்குப் பயன்தரும்வகையில் அமைந்துள்ள-ஆசிரியர் அ.நமசிவாயம் எழுதியஇக்கட்டுரையை இம்முறை 'மாணவர் எண்ணம்' தாங்கிவருகிறது.]*

"நாணம்......"

''இது என்ன கடைச் சரக்கா?'' என்று கேட்கின்றவர்கள் நிறைய இருக்கும் காலமிது. நாணமென்றால் வழிவழி நம் பண்பாட்டில் ஊறித்திளைத்த பெண்கள், தம் உயிரிலும் மேலாக மதிக்கின்ற பண்பென்று சொல்லத் தயங்கமாட்டார்கள். பெண்களின் தன்மான உணர்ச்சிக்கு அளவுகோல்தான் இந்தநாணமென்றால், அதை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் பலபேர்கள் நம் மத்தியிலே வாழுகிறார்கள்.

சமுதாயத்துக்கு விரோதமானவற்றை, பண்பாட்டுக்கு ஒவ்வாதவற்றை, தன்மானத்தக்கு இழுக்கானவற்றைச் செய்வதிற்காட்டும் தயக்கமே நாணம். இந்தப் பண்பு பெண்குலத்துக்கு உயிர் போன்றதென்றால், ஆணின் கௌரவத்துக்கும் இந்த நாணம் அவசியமே.

நாணமென்றால் ஏதோ கூனிக்குறுகி, வளைந்து நெளிந்து நிற்பதாக அர்த்தங் கொள்வோர்களுமுள்ளனர். எப்படியுமெவரும் வாழலாமென்று துணிந்துவிட்டபிறகு, நாணத்தைப்பற்றிச் சிந்திப்பதற்கோ அல்லது அதைக் காப்பதற்கோ வாய்ப்பில்லாமற் போய்விடலாம். நாணமுள்ளவர்களைத்தான் பண்பாளர்கள், பெரியார்கள், குடிப்பிறப்பாளர்கள் என்று பாராட்டுகிறோம். நாணமற்றவர்களை உலகமென்றுமே கௌரவித்தது கிடையாது.

நாணமற்றவர்கள் தமக்கு மட்டும் களங்கத்தை ஏற்படுத்தி விடுவதில்லை. தம்மைச் சார்ந்தவர்களையும் மதிப்பிழக்கச் செய்துவிடுவார்கள். நாணமிழந்து பசியைத் தீர்க்கலாம். சில பல இச்சைகளைத் தீர்க்கலாம். அதேசமயத்தில் பிறவியின் நோக்கத்தையும் அழித்துக் கொள்ளலாம். துன்மார்க்கர், துர்ச்சனர், தீயோர், மிருகவர்க்கத்தினர் என்றெல்லாம் இழித்துரைக்கப்படுகின்றவர்களைச் சிறிது மேலோட்டமாகப் பார்த்தாலே அவர்கள் நாணமற்றவர்களென்று தெரிந்துவிடும். ''உள்ளீடற்ற உருப்படிகள்'' என்று அவர்களைத்தான் சொல்லலாம்.

காலத்துக்குக்காலம் உலகின் பல்வேறு பகுதிகளிலுந்தோன்றித் தோன்றி மக்களினத்துக்கு வழிகாட்டிகளாக விளங்கிய மகான்களின் நேரிடை எதிரிகளாக இருப்பவர்களும் இந்த நாணமற்ற கூட்டத்தினரே. எதையுமாக்குவதுகடினம்; அழிப்பதோ மிகமிக இலகு. அழிப்பதைக் கையாலாகாதவர்களும் செய்துவிடுவார்கள் தானே? வீண்கலகக்காரர்கள், பொய்யர், திருடர், வியபிசாரிகள் என்று பேசப்படும் இத்தனை பேர்களும் நாணமற்றவர்களே. இன்னுஞ் சொன்னால், பொறுப்புணர்ச்சியற்றவன், நாணயமில்லாதவன் என்ற வரிசையில் உள்ளவர்களும் நாணமற்றவர்கள் தான்.

அமைதியிழந்து, வெறும் ஆரவாரத்துக்குமட்டுமுள்ளாகி வரும் இன்றைய சமுதாயத்தில், நாணமுள்ளவர்களைவிட, அது இல்லாதவர்களே எண்ணிக்கையில் மிஞ்சிவிட்டனர். இதனாலேதான் சட்டதிட்டங்களும், கட்டுக்கோப்புகளும், ஒழுக்க வரம்புகளும் உதாசீனஞ் செய்யப்பட்டு வருகின்றன. மிருகம், பறவைகளுக்குக்கூட அவைதம்வாழ்க்கையில் சிலபல ஒழுங்கு முறைகள் இருக்கவேஇருக்கின்றன. ஆனால் பகுத்தறிவென்ற ஒன்றை மேலதிகமாகப்பெற்றுவிட்ட மனிதனுக்கோ அந்த முறைகள் அருகிப்போகின்றன.

பெற்றாரை, பெரியவரை, வயதினரை, பெண்களை, நோயாளிகளை, இயலாது யாசிக்கின்றவர்களை, சிறுவர் சிறுமியரை, வழிப்போக்கர்களை ஏன்?- வண்டிவாகனங்களைக்கூட வேண்டிய இடங்களிலெல்லாம் மதிக்கத்தெரிவதில்லை. எல்லாமே சுதந்திரமாகப் போய்விட்டது. ஆனால் வாழ்க்கைச் சுதந்திரம்- முறையான வாழ்க்கைச் சுதந்திரம் மட்டும்- இல்லாமற்போய்விட்டது.

சமூகவிரோதச் செயலென்று கருதும்போது, பச்சிளம் பாலகர்களுக்குங்கூடப் பயந்து ஒடுங்கிய காலம் மலையேறிப் போய்விட்டது. தாயும் மகளும், தந்தையுந் தனயனும், அண்ணன்தம்பி அக்காள் தங்கையருங்கூடச் சில வேளைகளில், சில இடங்களில் மிக நெருக்கமாகவே இணைந்து கொள்ளுகிறார்கள். ஆசிரிய-மாணவ உறவுகளில்கூட அந்த இறுக்கமே நிலவுகிறது.

இந்த அவல நிலை ஏன் ஏற்பட்டது? இதைப்பற்றி யாராவது சிந்தித்தார்களா? பொழுதுபோக்கு நோக்கங்களில்-அதாவது சினிமா, நாடகம், இசைக்கச்சேரி என்பவற்றை அனுபவிக்கச்செல்லும் சமயங்களில்-அவற்றின் தாரதம்மியம், எமது வயது, ஆண்-பெண் வர்க்க வேறுபாடு ஆகிய இவற்றைப் பற்றிச் சிந்திக்கிறோமில்லையென்றால் புனித தலங்களையும் இந்த லட்சணத்தில் ஒரு கை பார்த்து விடுகிறோம்.

நாணத்துக்கும் தன்மானத்துக்கும் பிணைப்பிருப்பதைப் போல, நாணத்துக்கும் மனச்சாட்சிக்கும் நெருங்கியபிணைப்பிருக்கிறது. ''மட்சலம்போல மற்றவர்தொட்டால் மாசுறும் பெண்மை'' என்ற பாடலைப் பரவலாக எல்லாருமே கேட்டிருப்பார்கள். பஸ்வண்டிகள், புகைவண்டி ஆகியவற்றில் பிரயாணம் செய்யும் போது இந்தத் தயக்கத்தைக் காட்டிக் கொள்ளுகிறோமா; என்ன? பெண்மை மதிக்கப்படாதபோது நாணம் என்பது தொழிற்படுமா?

வெளிநாட்டு உள்நாட்டுச் சஞ்சிகைகளை எடுப்போமே. அவற்றில் விபரிக்கப்படும்கதை நிகழ்வுகள், திரைப்படக்காட்சிகள், சம்பாஷணைகள் குறுநவீனங்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டாலும் அங்கே அவற்றிலே பண்பாட்டுக்காக வென்று எதுவும் மறைக்கப்படுவதில்லை. பாலர் முதல் படுகிழம் வரை ஒன்றாக இருந்து அவற்றை அனுபவிக்கப் பழகிவிட்டோம்.

இடக்கரடக்கல் என்று சபை நடுவே பேசத் தகுதியற்றவற்றுக்குப் பண்பட்ட சொல் தேடி அமைத்துப் பண்பாடு கண்ட நம்மினம் இன்று எதையும் எப்படியும் பேசவும் எழுதவும் படிக்கவும் பார்க்கவும் என்று முயன்ற நாம், இன்று மிருகமாகவும் மாறத் தயாராகிவிட்டோம் காலத்தின் கோலந்தானென்ன?

மேலே குறிப்பிட்டவற்றிலெல்லாம் மருந்தளவுக்கும் மனச்சாட்சிக்கோ நாணத்துக்கோ கொஞ்சங்கூட இடம் வைக்கவில்லையே? இப்படியானால் தன்மானந் தலைதூக்குவது முடியாததாகி அது பழைய கதையாகிவிடும்.

பெரியோர் வகுத்ததை- அவர்கள் எதிர்பார்ப்பதை நாடி நயம்பெற முயல்வோருக்கு, எப்படியும் வாழலாம் என்றிருப்பார் மத்தியில் வேதனைகளைத் தவிர வேறென்ன இருக்க முடியும்?

---

## மாணவச் சிரிப்பு!

பௌதீக ஆசிரியர்:
மாணவர்களே நீங்கள் அரியத்தைக் கண்டுள்ளீர்களா?
மாணவன்:
ஆமாம் சார்... எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் தான் அவர் வீடு... நன்றாகத் தண்ணி போடும் ஆசாமி அவர்...

ந. பாலச்சந்திரன்
உரும்பிராய்
இந்துக்கல்லூரி.

---

# மாணவர் எண்ணம்

கண்டோஸ்

# அன்புத் தோழன்

-சி. வி. குணசேகரம்-

(4)

அரண்மனையின்இரண்டாம் மாடத்தில் இருந்த மன்னரின் சயன மண்டபத்தில், மன்னன் மகேந்திரபூபதி வேதனையால் முனகிக்கொண்டிருந்தான். அவனைச்சுற்றிவர நின்ற வைத்தியர்கள் அவனது உடல்நிலையைக்கணத்திற்குக்கணம் அவதானித்து சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தனர். பட்டத்தரசி குந்தவைதேவி புலம்பியபடி மன்னரின் தலைமாட்டில் அமர்ந்திருந்தாள்.

விக்கிரமன் பரபரப்புடன் மன்னரின் சயன மண்டபத்துள் புகுந்தான். அவன் உடைகளெல்லாம் புழுதிபடிந்திருந்தது. தலை கலைந்திருந்தது. வியர்வை மணிகள் முகமெங்கும் சிதறிக்கிடந்தன.

அரண்மனை வைத்தியர்கள் விக்கிரமனுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றனர் அந்தச் சயன மண்டபத்தில் சில கணம் பயங்கர அமைதி நிலவியது.

மகனைக் கண்டதும் குந்தவைதேவி ''கோ'' வென்று கதறினாள். தாயின்துயர ஓலம் விக்கிரமனின் நெஞ்சைப் பிழிந்தது. வேதனை மிகுதியால் அவன் கண்கள் கலங்கின.

அளவுக்கதிகமான வேதனையால் ஒருகணம் தன்னை மறந்த விக்கிரமன், மறுகணம் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு மன்னரது கட்டிலுக்கு அருகே இருந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

''அப்பா, உங்களை இந் நிலைக்காளாக்கிய அந்தக் கொடியவனை என்னால் பிடிக்கமுடியாமல் போய்விட்டதே. இனி நான் இருந்து என்ன பயன்'' என்று விம்மினான் விக்கிரமன்.

''விக்கிரமா இப்பொழுது தான் உனது வீரத்திற்கு சோதனை ஏற்பட்டிருக்கிறது. அரசகுடியில் பிறக்கும் ஆண் பிள்ளை குத்துவெட்டுப்பட்டு இறப்பதுதான் மரபு. அத்துடன் அரச பரம்பரைப் பெண்கள் தம் கணவரையும் பிள்ளைகளையும் எக்கணமும் இழக்கச் சித்தமாக இருக்க வேண்டும். இவை யாவும் தெரிந்த நீயா இப்படிக் கலங்குகிறாய். தேவி. நீ பெற்றது வீரனை அல்ல, வெறும் கோழையை'' என்றான் மன்னன் மகேந்திரபூபதி வெறுப்புடன்.

''அப்பா என்னை மன்னித்துக்கொள்ளுங்கள், இனிமேல் உங்கள் மகனது வாழ்க்கையில் பாசம் குறுக்கிடாது'' என்றான் விக்கிரமன்.

மன்னன் சிரித்தான். ''விக்கிரமா உன்னைப்பற்றித் தெரியாதா எனக்கு. உன்னைத் தைரியப்படுத்தவும் தேவியின் துயரைப் போக்கவும்தான் அப்படிக் கூறினேன்.''

''அப்பா உங்களை இந்நிலைக்காளாக்கிய அந்தக் கொள்ளிக்காடனைப் பிடித்து கண்டதுண்டமாக வெட்டிப்போடாமல் நான் உறங்கமாட்டேன் இது என்தாய்மீதாணை. என் தாய்த்திருநாட்டின் மீது ஆணை'' என்றான் வீராவேசத்துடன்.

''விக்கிரமா இன்னுமொரு கடமையுண்டல்லவா...?'' என்றான் மன்னன்.

''ஆணையிடுங்கள், இதோ புறப்படுகிறேன்'' என்று வாளை உருவினான் விக்கிரமன்,

அப்போது முதலமைச்சர் மணிவர்மன் அவசர அவசரமாக உள்ளே வந்தார். அவரது முகம் பேயடித்ததுபோல் திகிலடைந்திருந்தது.

''இளவரசே வெளியே வாருங்கள். உங்களோடு ஒரு முக்கிய விஷயம் பேசவேண்டும்'' என்றார் மணிவர்மன்.

விக்கிரமன் வெளியே வந்தான். ''இளவரசே மன்னர் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறார். அவரால் அதிர்ச்சிகளைத் தாங்கமுடியாது என்பதால் இந்த ஓலையை உங்களிடம் தருகிறேன்'' என்ற மணிவர்மன் தனது உடைக்குள் மறைத்துவைத்திருந்த ஓலையை எடுத்து விக்கிரமனிடம் பணிவுடன் கொடுத்தார்.

அந்த ஓலையை விரித்துப் படித்த விக்கிரமனின் இரத்தம் சில்லிட்டது உடல் சிலிர்த்தது.

ஒருகணம் தடுமாறிய விக்கிரமன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மீண்டும் ஒருமுறை அந்த ஓலையைப் படித்தான் பவளவல்லி என்னிடம் பாதுகாப்பாக இருக்கிறாள். அவளை மீட்க முயற்சிக்க வேண்டாம்' மீண்டும் விரைவில் சந்திப்போம்.

''கொள்ளிக்காடன்''

கொள்ளிக்காடனின் இச் செய்தியைக் கண்ணுற்றதும் விக்கிரமனின் ஆத்திரம் அதிகரித்தது.

மணிவர்மா இந்த ஓலையைக் கொண்டுவந்தது யார்? என்று கேட்டான் விக்கிரமன்.

ஒரு புறா இளவரசே! சிறிது நேரத்திற்குமுன்பு நான்அரண்மனை வாசலுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகச் சென்றபொழுது ஒரு புறா எனது தோளில் வந்தமர்ந்தது. அதன் சழுத்தில் தான் இந்த ஓலை கட்டப்பட்டிருந்தது.

அந்தப் புறா எங்கே...?

பாதுகாப்பாக இருக்கிறது இளவரசே.

இந்த ஓலைக்குத் தகுந்த மறுமொழி அனுப்பஏற்பாடு செய்யுங்கள். பின்பு சந்திக்கிறேன்... என்று கூறிவிட்டு மன்னரின் சயன மண்டபத்தை நோக்கிச் சென்றான் விக்கிரமன்.

இளவரசே...

முதல் அமைச்சர் அழைத்ததும் விக்கிரமன் நின்று திரும்பிப் பார்த்தான்.

இளவரசே மன்னருக்கு இந்த ஓலை விஷயத்தைச் சொல்லாமல் விடுவது நல்லதென்று நினைக்கிறேன்.

சிறிதுநேரம் யோசித்த விக்கிரமன்—

சரி மணிவர்மர். நான் சொல்லவில்லை என்று கூறிவிட்டு மன்னரின் சயனமண்டபத்துள் நுழைந்தான்.

வா விக்கிரமா... எதற்காக அமைச்சர் அழைத்தார்... என்று ஆவலோடு கேட்டார் மன்னர்.

உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டாம் என்கிறார்.

மன்னர் லேசாகச் சிரித்தார். பின்பு விச்கிரமா நீ ஒரு முக்கியமான கடமையை மறந்துவிட்டாய்... என்றார். அவர் கண்களில் நீர் துளிர்த்தது.

என்னப்பா...? பதறினான் விக்கிரமன்.

பவளவல்லியை அக்கொடியவன் கவர்ந்து சென்றுவிட்டான். என் குலக்கொழுந்து என்னென்ன துன்பங்களை அனுபவிக்குதோ... மன்னரின் குரல் கரகரத்தது.

கவலைப்படாதீர்கள் அப்பா, என் உயிரைக் கொடுத்தாவது என் ஆருயிர்த் தங்கையை மீட்பேன். இது சத்தியம் அப்பா...

உன் வீரத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதோ எனது பட்டத்துவாள் இருக்கிறது. பரம்பரை பரம்பரையாக உபயோகித்த வாள். இன்றிலிருந்து அது உனக்குத்தான் சொந்தம். அதை எடுத்துக் கொள்.

விக்கிரமன் தந்தையினது பாதங்களைத் தொட்டுவணங்கிவிட்டு, பக்திசிரத்தையோடு பட்டத்துவாளை எடுத்துஇடையில் சொருகினான்.

(அடுத்த எண்ணத்தில்)

---

## அமுதாக இனிக்கிறது

'அன்புத்தோழன்' அமுதாக இனிக்கிறது. தென்னகத்தில் இருந்து இறக்குமதியாகும் சிறுவர் சஞ்சிகைகளுக்கெல்லாம் சவால்விடுவது போல் விறுவிறுப்பாக சுவையாக இருக்கிறது. மாணவர்கள் மட்டுமல்ல இளைஞர் முதியோர்கூட அடிபட்டு வாசிப்பதை நேரில் காண்கிறேன். விறுவிறுப்பான தொடர் கதைக்கு படங்கள் இல்லாதது பெரிய குறையாகும். திரு. குணசேகரத்திற்கு எனது பாராட்டுகள்,

எம். பத்மநாதன்
நல்லூர்.

---

## சென்ற எண்ணம் கண்டு...

காலை மலர்ந்ததும்
அன்புத்தோழனாக-
வந்தீரே;
அறிவை வளர்த்திட
வந்தீரே!
எம்மிடையே
வெறுப்பைக் களைந்து
பாசமும், நட்பும்
ஏற்படச் செய்தீரே
நின் எண்ணங்களே
எண்ணமென
வாழ்ந்திடுவோம்
மாணவர் நாம்

-செல்வி வி. இந்துமதி
வேம்படி மகளிர் கல்லூரி

# பனஞ்சீனியை பெருமள .....

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

யான கருவியுடன் செய்து முடிக்கலாம்.

## எளிமையான கருவி

இங்கே குறிப்பிடும் கருவி எளிமையான எவரும் இலகுவில் செய்யக்கூடியதொன்ருகும். இக்கருவியை தன்னிசையாக இயங்க வைக்கவும் முடியும். ஆனல் இன்றைய பொருளாதார நிலைக்கு அது அவசியமும் இல்லை. எனவே ஒருவன் கீழே இருந்தபடியே விசைக்கயிற்றை இழுக்கும்போது கருவியில் பொருத்தப்பட்ட கூரிய கத்தியானது பாளையின் நுனியைச் சீவுவது மட்டுமல்லாது அடுத்தமுறை சீவுவதற்குத் தேவையான மாதிரி முன் கூட்டியே கருவிக்கு கணித்து கொடுக்கப்பட்டபடி அசைந்துநிற்கும். இதுமட்டுமல்லாது வடியும் பதநீரை ஏந்துவதற்காகப்பொருத்தப்பட்ட புனல் போன்ற அமைப்பும் இதன் கூடவே அசைந்து பாளையில் இருந்து வடியும் பதநீரை ஏந்துவதற்கு தயாராக இருக்கும். இங்கே குறிப்பிடப்படும் இக்கருவி இயங்கும் முறை தட்டெழுத்துக் கருவிகள் இயங்கும் முறையை ஒத்தது. தட்டெழுத்துக் கருவிகளில் ஓர் எழுத்துக்குரிய குறியை அழுத்தும்போது அவ்வெழுத்தின் அச்சு மேலே உருளையில்பொருத்தப்பட்ட தாளில் பதிவது மட்டுமல்லாமல் உருளை தேவையான அளவு தாளுடன் அசைந்து அடுத்த எழுத்துபதிவு செய்வதற்கு தயாராகின்றது, இதே தத்துவத்தில்தான் பாளை சீவும் கருவியும் இயங்குகின்றது.

## அமைப்பு

புதிய பாளைசீவும் கருவியின் அமைப்பை சற்று ஆராய்வோமாக. இக்கருவியில்மேலும் கீழுமாக இரு புறங்களிலும் பாளை சீவும் தடிப்புக்களில் பல்லுருக்களைக்கொண்ட சட்டம் (1) ஒன்று உண்டு. இதைவிட C உருவில் அமைந்த தகடு உண்டு. இது அரை வட்டத்தை ஞாபகப்படுத்தும் வகையில் உள்ளது. இந்தத் தகட்டுடன் கால்வட்டத்தை ஞாபகப்படுத்தும் தகடு பக்கப்பாட்டில் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விரு தகடுகளுக்குமிடையே ஒரு சிறிய வில் உண்டு. இதனுல் பெரிய தகட்டிலிருந்து சிறிய தகடு கிடைமுகமாக ஓர் அளவு அசையவும் மீண்டும் இச்சிறிய தகடு தன்னிலைக்கு வரக்கூடியதாகவும் இருக்கும். (2) இவ்வமைப்பு ஒரு தண்டுடன் (3) பொருத்தப்பட்டுள்ளது. இத்தண்டின் ஒரு நுனியில் கூரிய உருக்குக் கத்தி (4) இணைக்கப்பட்டுள்ளது. மறுமுனையில் ஒரு சுருளிவில் (5) இணைக்கப்பட்டுள்ளது. தண்டு (3) இன்னேர் தண்டுடன் (6) இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. இத்தண்டின் (6) ஒரு நுனி சுருளிவில்லு (7) உடனும் மறுமுனை இன்னுமோர் சுருளிவில்லு (8) உடனும் பொருத்தப்பட்டுள்ளது, சுருளிவில்லு (8)ன் மறுமுனை கூரிய கத்தியின் சுழல் அச்சிலிருந்து குறுகிய பாகம் அமைக்கும் நுனியுடன் பொருத்தப்பட்டுள்ளது. தண்டு (6)ல் தான் பாளையில் இருந்து வடியும் பதநீரை ஏந்தும் புனலுருவும் பொருத்தப்பட்டுள்ளது. இவ்வமைப்புக்கள் யாவும் படத்தில் காட்டியவாறு ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. இக்கருவியின் பக்கப்பர்ட்டிலுள்ள தாங்கிகள் இக்கருவியை பனைகளில் பொருத்த உதவும் இப்படியான கருவியைச் செய்வதற்கு 250-500 ரூபா வரை செலவாகலாம். இச்செலவை இக்கருவி ஓரிரு வருடங்களில் மீட்டுத்தந்துவிடும். இக்கருவியானது பனஞ்சீனி உற்பத்தியில் ஒரு நிலையான இடத்தை வெற்றிகரமாகப் பிடித்துவிடும் என்பதில்ஐயமில்லை.

இவ்வளவு பயன் தரும் இக்கருவி ஏழைச்சீவல் தொழிலாளர்களின் வாழ்வில் மண்ணைப் போட்டுவிடாதா? என்ற கேள்வி உங்களுக்கு எழுமல்லவா. ஒரே பதில் நிச்சயமாக இல்லை. ஏனெனில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 77 லட்சம் பனைகளுண்டு. இவற்றில் 2-3 லட்சம் பனைகளே 15 ஆயிரம் சீவல் தொழிலாளர்களால் சீவப்படுகின்றன. மேலும் ஏனைய பனைகளில் 74-75 லட்சம் பனைகளில் 10-15 லட்சம் பனைகளாவது புதிதாக பதநீர் சீவுவதற்குப் பயன்படுத்தலாம் அல்லவா? இதற்கு இந்தப் புதிய கருவி உதவி புரியுமல்லவா? அதுமட்டுமல்லாமல் புதிய வேலைவாய்ப்புகளையும் இக்கருவி உண்டாக்கித்தரும்.

இக்கருவியைப் பாவித்துச் கள்ளும் சீவலாம். ஆனல் எங்களுடைய ஒரு தாழ்மையான வேண்டுகோள் நாட்டுக்குட் பயன் தரும் பனஞ்சீனியை உற்பத்திசெய்ய இதைப்பயன்படுத்தவேண்டுமே அல்லாமல் போதை கொடுக்கும் மதுவை உற்பத்தி செய்து நாட்டையும் பல குடும்பங்களையும் கெடுக்க வழி வகுக்கவேண்டாமென்பது தான்.

(இதில் பாவிக்கப்பட்ட புள்ளியியல் தரவுகள் பனை வளம் என்னும் நூலிலிருந்து பெறப்பட்டன.)

# முட்கள்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கொத்துகின்ற இந்நிலமும்
உதிரத்தின் நிறந்தானே
உனக்குத் தெரிகிறதா
ஏனென்று புரிகிறதா?
(''மனிதன்''—பக். 33)

இக்கவிதைகளின் கருத்து ஒன்ருக இருந்தபோதிலும், அக்கருத்துக்களைத் தந்துள்ள முறைகள் இரு வேறுபட்ட உத்திகளாகும். இவ்விரு கவிதைகளிலும் நல்ல கவித்துவம் காணப்பட்டபோதிலும் கவிதை எழுதப்பட்டுள்ள உத்தியைக்கொண்டு கணிக்கும் பொழுது ''செம்மண்'' எழுதிய கனகராஜனைவிட ''மனிதனை'': எழுதிய கனகராஜனே மிகச் சிறந்த கவிஞனுகத் திகழ்கிருன்.

வேறு சில கவிதைகள் வாசிக்கும்போது ஒரேவிதமானதாகவே தோற்றுகின்றன. ''தாற்றல்'' (பக். 43), ''துட்டர்'' (பக். 71).

சிறந்த புதுக் கவிதைகளில் படிமங்கள், குறியீடுகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மரபுக் கவிதை எழுதிய சில கவிஞர்கள் எதுகை, மோனைகளிலும், அணிகளிலும் சிக்குண்டு, சொல்லவந்த கருத்துக்களை மறந்து கவிதையை உப்புச்சப்பற்றதாக்கியதுண்டு. இதுபோலவே புதுக் கவிதை எழுத வந்த சிலரும் படிமங்களில மூழ்கி, கவிதையையே படிமங்களுள் மூழ்கடித்ததுண்டு. இக்குறைபாடு மு. கனகராஜனிடம் அரிதாகவே காணப்பட்டபோதிலும் சில கவிதைகளில் அவருக்கே தெரியாமல் புகுந்துள்ளதைக் காண முடிகிறது. ''முதலாளித்துவம்'' (பக். 62), ''உலக வங்கி'' (பக். 63) ஆகியவை இப்படியான விளக்கமில்லாத கவிதைகளுக்கு உதாரணமாகும். அதேவேளையில் சிறப்பான படிமங்களை வெகு சாமர்த்தியமாகப் புகுத்தியுள்ள பல கவிதைகள் இத்தொகுப்பில் காணப்படுகின்றன. ''அன்னையின் நெஞ்சம்'' (பக். 51), ''மார்றுதல்'' (பக். 51), ''கூழ்'' (பக். 57), ''தேவதாரு பெட்டிக்குள் ஒரு தேசியக் கவிஞன்'' (பக். 65) போன்ற கவிதைகளைக் காட்டலாம். தொகுப்பிலுள்ள பல கவிதைகளின்மூலம் ஒரு தேசியக் கவிஞனுக மிளிர்கின்ற கனகராஜன் ''வியத்னும் வீணை, ''தேவதாரு பெட்டிக்குள் ஒரு தேசியக் கவிஞன்'' போன்ற கவிதைகளின் மூலம் ஒரு சர்வதேசக் கவிஞனுகவும் தரமுயர்கிருர்.

தொகுப்பிலுள்ள மிகச் சிறந்த கவிதைகளில் ஒன்ருன ''நிர்மாணம்'' (பக். 98) தமிழகத்துப் புரட்சிக் கவிஞர இன்குலாப் கவிதைகளை நினைவூட்டுகின்றது. ஆயினும் இன்குலாப்பின் கவிதைகளில் போனறு சிக்கலான படிமங்களும், சொற்பிரயோகங்களுமின்றி மிக எளிமையாகவும் அதே வேளையில் வெற்றுச் கோஷமற்று உணர்ச்சிபூர்வமானதாகவுமிருப்பதால் இன்குலாப்பின் கவிதைகளிலும் பார்க்க கனகராஜனின் இக் கவிதை உயர்ந்து நிற்கின்றது.

கவிதையை இப்படித்தான் எழுதவேண்டும் என்று- ஒரு மக்கள் கவிஞனுக்கு யாராலும் கட்டளையிட முடியாது. அவ்வாறு அக்கவிஞனுல் எழுதவும் முடியாது. ஒரு கவிதையை எழுதி முடிப்பதற்குள் கவிஞனின் உணர்வுகள் பல்வேறு வகைகளில் மாறுபடக்கூடும். அம்மாற்றங்களின பிரதிபலிப்பு அவனது படைப்பில் தென்படுவதும் தவிர்க்க முடியாததே. படைப்பாளியையும், அவனது படைப்பையும் பொறுத்தவரை இது பலமாகவோ அல்லது பலவீனமாகவோ அமையக்கூடும். படைப்பு எடை போடப்படும் போதுதான் இது பலமா? பலவீனமா? என்பதை அறிய முடியும். கனகராஜனின் கவிதைகளுக்கும் இது விதிவிலக்கல்ல.

சில கவிதைகளில் ஆரம்பம் வீருனதாக இருந்தபோதிலும் ஈற்றில் அந்த வீறு அப்படியே இல்லாமலாகிவிடுவதைக் காண முடிகிறது. ''முட்பிழம்பு'' (பக். 85) போன்ற கவிதைகளை இதற்குக் காட்டலாம். இச்குறைபாட்டினுல் அக்கவிதைகள் வீழ்ச்சியடைந்துவிட்டன என்றே கூறல் வேண்டும். ஆயினும் சில கவிதைகள் இறுதிவரை வீறும், வீருப்புமுடையதாகவே திகழ்கின்றன. இவற்றிற்குதாரணமாக ''எழுச்சி'' (பக். 87), ''காலத்தீ'' (பக். 93) போன்ற கவிதைகளைக் காட்டலாம். ''விடியல்'' (பக். 88) போன்ற கவிதைகளில் ஈரறடிகளே உயிரூட்டுகின்றன.

சுருக்கமாகச் சொல்வதானுல் இதுவரை ஈழத்தில் வெளிவந்துள்ள புதுக் கவிதைத் தொகுப்புக்களில் மிகத் தரமான ஒன்று மு. கனகராஜன் படைத்துள்ள ''முட்கள்.''

# முகம்மதலி மீண்டும் சாம்பியன்

நைரோபி, செப். 16

உலக அதிபார குத்துச் சண்டை சாம்பியனுன லியோன் ஸ்பிங்சுக்கும், முன்னுள் சாம்பியன் முகம்மதலிக்கும், நேற்று நைரோபியில் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் முகம்மதலி வெற்றியீட்டி மீண்டும் உலக சாம்பியனுனர்.

இப் போட்டி மூலம் முகமதலிக்கு 32 லட்சம் டாலர் பணம் கிடைத்துள்ளது.

(கெ-இ)

## வெங்கயயம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுநீரக நோய்கள், மகோதரம், கீல்வாதம், வலிப்பு போன்ற நோய்களிலும் வெங்காயம் மிகவும் பயன் தருகிறது. வெங்காயத்தின் பயனைப் பற்றி பழைய காலந் தொட்டே இந்தியா, அரேபியா, கிரேக்க, எகிப்திய மருத்துவ நூல்கள் இயம்புகின்றன.

ஆரோக்கிய வாழ்வுக்கு வெங்காயம் இன்றியமையாதது என மேனுட்டு வைத்தியர்களும் இன்று கருதுகிருர்கள். வெங்காயத்தில் பல வகை இருட்பினும் யாழ்ப்பாண சிறு வெங்காயமே எல்லா வகையிலும் சிறந்தது எனவும் கருதுகின்றனர்.

## நமது நூல் நிலையம்,...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவிட்டபுர மகிமை, சத்தின் பல பெயர்கள், கவிபாடவேண்டுமென்னும் விருப்பம், அநுபூதி அடைதலில் ஆவல், புறச்சமய இருளோட்டல், பொய்மையாளரைப் பாடாதே, நகுலகிரிநதி, ஞானகுரு; ஆடி அமாவாசைத் தீர்த்தம் முதலிய பல விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

கற்றேர் கற்று இன்பமடைவார்களாக!

-பண்டிதர்
செ. சிவப்பிரகாசம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்
சொல்லத்தான் நினைக்கிறேன்

By Popular Demand
Back Again
Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Born Black
(Adults Only)

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
எம். ஜி, ஆர்.-ஜெயலலிதா
கணவன்

ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயகுமாரி-எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா
நடித்த
சாந்தி

இன்று மட்டும்
போன்: 7642.
சாந்தி
(யாழ்நகர்)
தினசரி 10-15, 2-15, 6-15, 10-00
ரஞ்சன், ரி. ஆர். ராஜகுமாரி நடித்த
சந்திரலேகா (புத்தம் புதிய பிரதி)
18-ம் திகதி முதல்
சிவாஜி - விஜயா
செல்வம்

ராஜா
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-விஜயகுமார்
ஜெய்சித்ரா-தங்கவேலு
பொண்ணுக்கு தங்கமனசு
(புதிய பிரதி)

REGAL Jaffna 5th&LASTCROWDEDWEEK
Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ
(யாழ்.நகர்
போன்: 7698
தினசரி 4 காட்சிகள்
தாய்க்குத்தலைமகன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - தேவிகா
ஆண்டவன் கட்டளை
புதிய பிரதி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-நாகேஷ்
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

## ஜே. ஆர். 72-வது பிறந்ததினச் சிறப்பிதழ்

# LET US BUILD A JUST AND FREE SOCIETY

## "உண்மையான சுதந்திர சமூகத்தை உண்டாக்குவோம்"

-ஜே. ஆர்



## மக்கள் தலைவர் ஜே. ஆர்.

சட்டமியற்றும் நிறுவக அமைப்பினதும் பிரதான நோக்கம் கலந்துரையாடிச் சட்டமியற்றுதலே ஆயினும் ஒரு நாட்டினை நல்லதோ பெருமை வாய்ந்ததோ ஆக்குவன சட்டங்கள் மட்டுமல்ல அந்நாட்டின் தலைவர்களினதும் நல்லநடத்தையும் அவர்களுடைய சிறந்த முன்மாதிரியுமேயாகும் என்பதே அக்கருத்தாகும். இப்பேரவையின் எல்லாப் பக்கங்களிலுமுள்ள எனது சகாக்களுக்கு ஒன்றைக் கூறிவைக்க அவர்கள் என்னை அனுமதிப்பார்களாக. அறிவொளியை அகம் நோக்கிப்பாச்சி உங்களுக்கு நீங்களே ஓர் ஒளி விளக்காகத் திகழுங்கள். உண்மையை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். அங்ஙனம் செய்வீர்களாயின் இவ்வாழ்விலோ இதன் பின்னரே தீ தொன்றும் உங்களை அணுகாது.'

(3-4-78 ஹான்சாட்டிலிருந்து.)

ஃ ஃ ஃ

## நாடெங்கும் கொண்டாட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் 72வது பிறந்ததினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

பிறந்த தினத்தை ஒட்டி நாடு பூராகவும் விசேட சமய நிகழ்ச்சிகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெற ஏற்படாகி உள்ளது.

## ஜே. ஆர். பற்றி அமிர்


மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இலங்கைக்குடியரசின் முதல் ஜனாதிபதியாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பதவியேற்குமுன் பிரதம மந்திரி என்ற முறையில் தேசிய அரசுப் பேரவையிலிருந்து பிரியாவிடைபெற்றுக் கொண்டபொழுது எதிர்க் கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் அவரைப் பாராட்டி நிகழ்த்திய உரையின் ஒருபகுதி கீழே தரப்படுகிறது.

இந்நாட்டில் அரசியல் தலைவர்களில் உன்னதமான ஓரிடத்தைப் பெற்ற உத்தம தலைவர் ஒருவருக்கு வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கப்படும் இச்சந்தர்ப்பத்தில் சில வார்த்தைகள் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

1956ஆம் ஆண்டிலும் 1970ஆம் ஆண்டிலும் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியைத் தழுவிய நேரங்களில் இந்த நாட்டில் ஒரு கட்சியின் ஆட்சி என்றென்றும் நிலை நிற்கும் என்ற அச்சம் பலருடைய உள்ளங்களிலே ஏற்பட்டது. ஆனால் இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல் திறமையான திட்டங்களைத் தீட்டி ஆர்வமிக்க உற்சாகமான வழிநடத்தல் மூலம் ஐக்கிய தேசியக்கட்சியை மீண்டும் வெற்றிப் பாதையில் அழைத்துச் சென்றார் கௌரவ ஜே. ஆர். ஜெயவர்த்தன என்றால் யாராலும் அதை மறுக்கமுடியாது. அதன்மூலம் அவர் ஆற்றிய சேவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரமல்ல இந்த நாட்டில் ஒரு கட்சி ஆட்சி என்ற நிலை இல்லாமல் சனநாயகம் நிலைக்க சனநாயகம் பாதுகாக்கப்பட வழிவகுத்தது.

1965ஆம் ஆண்டுத் தேர்தலில் அவருடையகட்சி வெற்றி பெற்றாலும் அவருக்குகிடைக்க வேண்டிய அந்தஸ்துக்கிடைக்கவில்லை. இந்த நாட்டிலே நாம் காணுகின்ற பலர்போல பெருந்தன்மையற்ற ஒருவராக அவர் இருந்திருந்தால் தனிப்பட்ட வாழ்வில் தமக்கு ஏற்பட்ட தாக்கத்தால் தாம் சார்ந்த கட்சிக்கு விசுவாசமற்றுநடந்திருக்கலாம். ஆனால் தமது தனிப்பட்ட முன்னேற்றத்தைக் கருதாமல் கட்சியையும் கொள்கையையும் கருத்திற்கொண்டு அவர் நடந்த காரணத்தால் அவர் தாம் சார்ந்த இயக்கத்தில் காட்டிய விசுவாசம்தான் இன்று அரசியல் அதிகாரத்தின் உச்சச் சிகரத்தில் அவரைக் கொண்டு போய் வைத்திருக்கிறதென்று தான் கூறவிரும்புகிறேன். வாய்ப்பேச்சில் ஒழுக்கநெறிக்கும் தர்மசீலத்துக்கும முதலிடம் கொடுக்கப்பட்டாலும் ஊழலும் ஒழுக்கக் குறைவும் பல வழிகளிலும் மலிந்திருக்கின்ற இந்த நாட்டிலே தமது தனிப்பாட்ட வாழ்விலும், பொதுவாழ்விலும் ஒழுக்கத்தையும் தர்மநெறியையும் கடைப்பிடித்து வருகிற ஒரு தலைவராகதிரு.ஜெயவர்த்தன விளங்கி வருகிறார். அதேபோலவே ஒழுக்க நெறியிலும சத்தியநெறியிலும் நமபிக்கை கொண்ட ஒரு தலைவராக விளங்கிய மறைந்த எனதுதலைவர் திரு. செல்வநாயகம்அவர்களால் வழி நடத்தப்பட்ட ஒருவன் என்ற வகையிலே இந்தக் குணதிசயங்களைப் பெற்றிருக்கின்ற ஒரு பெரும் தலைவரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு நான் தனிப்பட்ட மதிப்பை அளிக்கக் கடமைப்படுகிறேன்.

3-4-78 'கன்சாட்டிலிருந்து'



## தார்மீகத் தலைவருக்கு இதயபூர்வ வாழ்த்து

உன்னதமான- நீண்டகால ஓர் அபிலாஷையின் நிறைவோடு அவரது வாழ்வின் 72-வது ஆண்டில் அவர் காலடி வைககின்றார்.

சகலருக்கும் சமத்துவமான- சுபிட்சமான வாழ்வை அளிக்கும் ஒரு தார்மீக சமுதாயம்;

அதற்கேற்ப. சுதந்திரமும்- இறைமையும்- தன்னதிக்கமும் கொண்ட, ஜனநாயக- சோஷலிச அமைப்பிலான ஒரு குடியரசு.

அவரின் அபிலாசைகள் இவை; குடியரசை அவர் அமைத்துவிட்டார்.

ஈடிணையில்லாத ராஜதந்திரமும்,மதிநுட்பமும், நிதானம்- அமைதி-உறுதி நிறைந்த செயற்பாடும், துணிச்சலும் இப்புரட்சிக்கு அவருக்கு உதவின.

கட்சியின் மீது அவர் கொண்ட விசுவாசம் ஆட்சி அதிகாரத்தின் உயர்நிலைக்கு அவரை ஏற்றியது.

ஒழுக்கமும், சத்தியமும் நிறைந்த அவரின் வாழ்வு ஆத்மபலத்தை அவருக்களித்து, இலங்கையின் அரசியல் தலைவர்களுள் சிறப்பு வாய்ந்த ஓரிடத்தையும் சரித்திரதில் பெற்றுக்கொடுத்திருக்கின்றன.

ஆனாலும், அவர் எவ்வித சலனமுமின்றியே நடந்து கொண்டிருப்பார்.

சுகமோ, துக்கமோ வெற்றியோ, தோல்வியோ அவரிடத்தில் எவ்வித தாக்கத்தையுமே உண்டுபண்ணியதில்லை.

தார்மீக சமுதாயம்; அவரின் தார்மீக மந்திரம்.

அதற்காக அவர் நடப்பார். புதிய அரசமைப்பு தமிழ் மக்களின் உரிமைகளுக்கு முன்னெப்பொழுதுமில்லாத கூடுதல் உத்தரவாதத்தையும் உரிமைகளையும் அளித்திருப்பது அனைவராலும் பகிரங்கமாகவே ஒப்புக்கொள்ளப்படுவது.

வகுப்புவாதத்தையே அரசியல் லாபத்துக்குப்பெருமளவில் பயன்படுத்தப்பட்ட நிலையில், பெரும்பான்மையினரின் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்த கட்சி, அவர்களின் விரோதத்தைச் சம்பாதித்து-எடுத்த எடுப்பிலேயே அனைத்தையும் சிறுபான்மையினருக்குச் செய்துவிட முடியும் என்றோ - செய்ய வேண்டுமென்றோ யாரும் எதிர்பார்த்துவிட முடியாது; அதில் நியாயமுமில்லை.

ஆனாலும், காலப்போக்கில் இப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வல்லமை படைத்த ஒருவருக்கு நம்முடைய ஒத்துழைப்பை நல்குவோம்,

அன்னாரின் தார்மீக புனிதப் புரட்சி தொடர அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து நீதி தேவதைக்கு நேர்மையுடன் தொண்டாற்றும் ஒரு தொண்டனகப் பிரகாசிப்பகராக.

ம, அமிர்தலிங்கம்

தலைவர், ஐ. தே. க.
தேசிய சேவைத்
தொழிற்சங்கக் கூட்டணி
யாழ். மாவட்டம்,

## 'எங்கள் பெருந் தலைவர்'

-பிரதமர்

திரு. ஜெ. ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதி பதவியை ஏற்கும் பொருட்டு பிரதமர் பதவியை விட்டு நீங்கியபொழுது புதிய பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா தேசிய அரசுப் பேரவையில் விடுத்த அறிக்கையின் ஒரு பகுதி.

எங்களுடைய பெருந்தலைவர் இச்சபையிலிருந்து வெளியேறியதால் ஏற்பட்டுள்ள இடைவெளி, சாதாரணமாக நிரப்பக்கூடியதொன்றல்ல.

பல இனத்தையும், பல்வேறு மதங்களை, பல மொழிகளையும் கொண்ட சமுதாய அமைப்பை உடையது எங்கள் நாடு. ஆயினும் நாம் அனைவரும் ஒன்றுபட்ட மக்களே யாவர்.

இந்த உண்மையை நான் எப்போதும் என் மனக்கண் முன் வைத்திருக்கத் தவற மாட்டேன். சகல மக்களிடமும் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதன் மூலம் இனம், மதம், மொழி என்ற வேற்றுமைகளை மறந்து சகலருக்கும் மதிப்பும் மரியாதையுமளிக்க நான் தவறமாட்டேன். இந்த அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு புதிய தேசிய ஒற்றுமை உணர்ச்சியையும், தேசியப் பங்கான கண்ணியத்தையும், ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நம்பிக்கையும், தோற்றுவிப்போம். இப்படிச் செய்வதன் மூலம் இறுதியில் நாம் அனைவரும் வெற்றி காண்போம் என்ற திடநம்பிக்கையுடன் அனைவரும் ஒன்றாக வாழுவோம், ஒன்றாகக்கல்வி பயிலுவோம், ஒன்று சேர்ந்து நாட்டுக்காக உழைப்போம்.

எங்கள் தலைவர் நடைமுறைகளிலும், ஒழுக்க நெறியிலும் புதிய பிரமாணங்களை எமக்கு வகுத்துத்தந்திருக்கிறார். இவற்றோடு கடினஉழைப்பின் அவசியத்தையும ஒரு பிரமாணமாக நாம் சேர்த்துக் கொள்வோம். நாட்டுக்காகவும், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகவும் நாம் பக்திபூர்வமான தியாக உள்ளத்துடன் கடின உழைப்பில் ஈடுபடுவோமாக.



## பல்லாண்டு வாழ்க

"இந்நாட்டில் தொழிற்சங்கத்திற்கு நீண்டவொரு சரித்திரமிருந்தாலும், உண்மையான சகாப்தம் ஐ. தே. கட்சி தொழிற்சங்க இயக்கத்தை கட்டியெழுப்ப முன்வந்த பின்னரேயாகும். ஐ. தே. கட்சி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டது தற்போதைய ஜனாதிபதி மாட்சிமை தங்கிய ஜே. ஆர், ஜெயவர்த்தன அவர்களின் தீர்க்கமான நம்பிக்கையே காரணமாகும்.

அன்னாரின் பணி தொழிற்சங்கவாதிகட்கு ஓர் ஆக்கபூர்வப்பணி. அவர் பல்லாண்டு காலம்வாழ்ந்து புதியதொழிற் சங்க புரட்சிக்கு வழி வகுப்பாராக. தொழிலாளப் பெருமக்கள் சார்பில் இவ்வாழ்த்தைக் கூறுவதில் யான் இறும்பூதெய்துகின்றேன்.

டக்ளஸ் அபேயதீர

(பொதுச் செயலாளா)
அரசசேவை தேசிய
தொழிற்சங்க சம்மேளனம்

இந்தச் சிறப்பிதழ் யாழ். மாவட்ட தேசிய சேவைத்- தொழிற்சங்கக் கூட்டணி சார்பில் அதன் தலைவர் திரு. ம அமிர்தலிங்கத்தினால் தொகுக்கப்பட்டது.

அன்பளிப்பு

ஈழத்தின் பிரபல புடவை வியாபாரிகளான
"ராஜ்கோபால்ஸ்" யாழ்ப்பாணம், கொழும்பு.
"சிப்சைட்" யாழ்ப்பாணம், கொழும்பு.
"நாகமுத்தூஸ்" யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு.
"அசோகன்ஸ்" கொழும்பு.
"மணியம்ஸ்" யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka